உ
சிவமயம்

ஓம் கன்னிமூல கணபதிபகவானே
சரணம் ஐயப்பா

# "சபரி கிரீஸ்வரம்"



"சபரீச வாசம்"
ஈழவூர்சைவப்புலவர் ஐயப்பசாமி
சிவஸ்ரீ குமாரசாமி சுழுகலிங்கம்

வெளியீடு
கட்டுவன் கரண்டைக்குளம் சபரிகிரி தேவஸ்தானம்.
12.01.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னலட்சுமி கந்தசாமி
81715978

உ
சிவமயம்

ஓம் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையாரே சரணம் சரணம்
ஓம் சபரிமலை தர்ம சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் கட்டுவன் சபரி கிரி ஐயப்பனே சரணம் ஐயப்பா
ஓம் கோப்பாய் சபரீசவாசப் பிரிய சபரீச வாசனே சரணம் ஐயப்பா

# "சபரிகிரீஸ்வரம்"




தொகுப்பு:
"சபரீச வாசம்"
ஈழவூர்சைவப்புலவர்
சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா M.A.J.P
தொ.இல:-0775835372



வெளியீடு:
கட்டுவன் கரண்டைக்குளம் அகில இலங்கை சபரிகிரி
ஐயப்பசுவாமி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

ஆசியுரைகள்
வாழ்த்துரைகள்
மதிப்புரை
என்னுரை
விரத விதி
சரணக்கோவை
ஐயப்பன் கவசம்
பிள்ளையார் பாடல்
குரு பாடல்கள்
சிவன் பாடல்
அம்மன் பாடல்கள்
முருகன் பாடல்கள்
கிருஸ்ணர்பாடல்
ஐயப்பன் பாடல்கள்
நாகராசா பாடல்கள்
ஆஞ்சனேயர் பாடல்
கறுப்பன் பாடல்கள்
படிப்பாடல்கள்
மங்களம்
சாஸ்த பஞ்சரத்தினம்
நடைசாத்தல்
ஸ்ரீ ஐயப்பன் அவதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்:

1. ஸ்ரீ தர்மசாஸ்தா ஐயப்பன் வழிகாட்டி II

2. ஸ்ரீ ஐயப்பனை சரணடைந்து 100 ஆண்டு வாழ வழிகள்.

3. சுவாமி ஐயப்பன் திவ்ய கதை

4. தவசி பஜனை மலர்

5. மாருதி கவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை



ஸ்ரீ பூதநாத சதானந்த
ஸர்வபூத தயாபர
ரக்ஷ்ரக்ஷ் மகாபாகோ
ஸாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ

கலியுக வரதன் கண்கண்ட தெய்வம் ஐயன் ஐயப்பனுடய குணாதிசயங்கள் பெருமைகள் சொல்லற் பாலதன்று. இந்து ஆலயங்களிலே நடைபெறும் உற்சவங்கள், கிரியைகள், வழிபாட்டு முறைகள் பற்றிய நிச்சயமான விளக்கங்களை அறிந்து கொள்வதில் சைவ மக்கள் மத்தியில்தீவிர வேகம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆலயங்களில் இடம்பெறும் பூசைகள், உற்சவங்களை தரிசிப்பதோடு மட்டும் திருப்தி அடைந்து வந்தார்கள் சென்ற கால மக்கள். ஆனால் இக்காலத்தில் பூஜைகள் எவ்வாறு செய்யப்படுகின்றன? ஏன் செய்யப்படுகின்றன? ஒவ்வொரு பூஜைகளினதும் பெறுபேறு என்ன என்பதை எல்லாம் அறிந்து கொள்வதில் சைவ மக்கள் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

இவ்வண்ணம் இச்சமயத்தில் வெளிவரும் சபரிகிரீஸ்வரம் எனும் நூலில் ஐயப்பன் வழிபாட்டு முறைகள் விரத முறைகள் பற்றிய முழு விளக்கங்களையும் கொண்டதாக இருப்பது போற்றுதற்குரியது. இந்நூலாசிரியர் கையாண்டிருக்கும் இலகுவான நடை சாதாரண பக்தர்கள் முதல் சாமிமார்கள் வரை எல்லோரும் ஐயனின் வழிபாட்டு முறை பற்றிய உறுதியான விளக்கத்தை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைந்திருக்கின்றது. சில முக்கிய விஷயங்கள் கூட எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

ஐயனின் 108 சரணக்கோவைக் கவசம், விரத விதிமுறைகள், ஐயனின் வரலாறு, பொன்ற பல விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளது ஐயப்ப பக்தர்கள், கன்னி சாமிமார்கள் ஐயனின் விரதத்தை பற்றி நீங்களாகவே விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் இந்நூலை ஆக்கியிருக்கிறார் இந் நூலாசிரியர்.மொத்தத்தில் இக்காலத்திற்கு அவசியம் இப்படி ஒரு நூல் தேவை எல்லா சாமிகளும், பக்தர்களும் இதை வாசித்து திடமான விளக்கங்களை அறிந்தவர்களாக வாழவும், இந்நூலாசிரியருடைய இறைபணி இன்னமும் சிறக்கவேண்டும் எனவும் ஐயனைப்பிராத்திக்கின்றேன் .

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சாமியே சரணம் ஐயப்பா

சிவஸ்ரீஅருணசலக்குருக்கள் -குருசாமி

சபரிகிரி ஐயப்பசாமி தேவஸ்தானம்,கரணடைக்குளம்,தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# ஆசியுரை



V. A. Thangkamayl
A.M.S.S.T.(Lond.), F.S.I. (Sri Lanka), MA (BA) Sri Lanka. Dip. C.Eng; Dip. Psy
Licensed Surveyor, Leveller Quantity Surveyor, Court's Commissioner,
Sithantha Pandit & Saivappulavar - PANDIT

PLAN NO
2003 - 01 - 03
Tharikkapattu, Malisanthy,
yathiry, Karaveddy.

[illegible] "சபரி கிரீஸ்வரம்" என்னும் அருள்' [illegible]

[illegible]



சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
பண்டிதர், திருவருள்

சிவஸ்ரீ. வ. ஆ. தங்கமயில் MA (Dist) சைவசித்தாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை



## வாழ்த்துரை

ஈழமணித்திருநாட்டின் யாழ்மண்ணில் வலிவடக்கு கட்டுவன் திருப்பதியில் இருந்த அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் ஐயப்பனுடைய திருத்தலம் பழமையும், புதுமையும் கொண்ட ஒரு திருத்தலமாகும். இத்திருத்தலம் மூர்த்திச் சிறப்பும், கீர்த்திச் சிறப்பும் மிக்கது. ஐயப்பன் வழிபாடென்பது மிகவும் புனிதமாக ஆற்றவேண்டிய ஒரு வழிபாடாகும். சிறப்புமிகு இவ்வழிபாட்டினை ஐயப்பன் விரதகாலங்களில் மட்டுமன்றி ஏனைய காலங்களிலும் பக்திசிரத்தையோடும், பயபக்தியோடும் அனுஷ்டிக்க வேண்டும். அப்போதுதான் வழிபாட்டின் பயன் உணரப்படும்.

ஐயப்பன் வழிபாடு பற்றிப் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில்தான் இக்கட்டுவன் பதியுறை ஐயனார் ஆலயத்திலும் ஐயப்பன் வழிபாடடங்கிய ஒரு திருநூல் வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும். ஐயப்ப பக்தர்கள் அறிந்த கொள்ள வேண்டிய ஐயப்பனின் வரலாறு, சரணக்கோவை, விரதவிதிகள், ஐயப்ப கவசம், பயனைகள் என்பன அடங்கிய ஒரு திருவருட் பனுவலாக இந்நூல் வெளிவருகின்றமை பாராட்டுக்கும், வாழ்த்திற்குமுரியதாகும். நூல் வெளியீட்டிற்கு உரித்துடைய அத்தனை பேருக்கும், அனைவருக்கும் ஐயப்பன் திருவருள் குறைவறாது கிடைக்க எல்லாம் வல்ல கட்டுவன் பதியுறை ஐயப்பன் திருப்பொற்தாள்களை வணங்கி வாழ்த்துக் கூறி அமைகின்றேன்.

திருமதி.மகிந்தினி விஜயகுமார்,
அபிவிருத்தி உத்தியோத்தர் (இந்து கலாசாரம்)
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# வாழ்த்துச்செய்தி



ஓம் சாமியே சரணம் ஐயப்பா

கலியுகத்து கண்கண்ட தெய்வமாக குழந்தை வடிவாக குற்றம் களையும் குணசீலனாக இன்று எல்லோராலும் சரணகோஷத்தினால் கூவி அழைக்கப்படுபவன் சபரிமலை வாசன், சபரிகிரீசன், சாந்த சொரூபன், சற்குணநாதன், குருவின் குருவானவன் சுவாமி ஐயப்பன் ஆவான். அவன் நாமம் புகழ், கீர்த்தி பெறுபவர்கள் அவன் திருவருளை திருவிளையாடல்களை வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் வெளிவருகின்ற சபரி கிரீஸ்வரம் எனும் அருள் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதும், இச் சிவப்பணி சிறக்க வாழ்த்துவதும் ஐயன் அருளே ஆகும்.

சாமியே சரணம் ஐய்பா

திருமதி.கு.கமலாதேவி
செயலாளர்
தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# மதிப்புரை



"ஓம் சாமியே சரணம் ஐயப்பா"

மனிதனை தெய்வமாக்குகின்ற விரதம் ஐயப்ப விரதம். மனிதன் பிறந்த நாள் முதல் பல கட்டுக்களோடு, கவசங்களோடு வாழுகின்றான். இந்தப் போலி கவசங்களைக் களைந்து உள்ளார்ந்தமாக பரமாத்மாவை தரிசிப்பதற்கு துணைபுரிகின்ற விரதம் ஐயப்ப விரதம். அதாவது மாலை அணிந்தவரை ஐயப்பனாக பாவனை பண்ணி சாமி ஐயப்பனே அவர் என்று நெஞ்சார நினைத்து வீழ்ந்து வணங்குகின்றோம். அவர் மீது அன்பு காட்டுகின்றோம். கருணை கொள்கின்றோம். இந்நிலமைகள் மாலையணிந்தவரின் தனிப்பட்ட கெட்ட குணங்கள் ஒடுங்கச் செய்து அவர் தெய்வ நிலை அடைகின்றார். இவ்வாறான அற்புதமான ஐயப்ப வழிபாடு அண்மைக்காலத்தில் பெருவளர்ச்சி கண்டுள்ளமை நிதர்சனமான உண்மை. வழிபாடு வளருகின்ற போது அதனை தட்டிக் கொடுப்பதற்கு சரியான பாதையைக் காட்டுவற்கு அவை பற்றிய புத்தகங்கள் தேவை. இப்பணியை இப்பெரியார் மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றார்.

சென்ற ஆண்டு கட்டுவன் கரண்டைக்குளம் சபரிகிரீ ஐயப்பசாமி தேவஸ்தான ஐயப்பனை தரிசித்து வருவோம் வாருங்கள் என்று சுமுகலிங்கம் ஐயா அவர்களை அழைத்துச் சென்றேன். திருப்பாக்களால் இறைவன் புகழ் பாடி எமது சமய வழிபாட்டினை மீளகட்டி எழுப்பி தேவாரமுதலிகள் பணியொன்று இவ் ஆலய சூழலில் இருப்பதை உணர்ந்தோம். ஆலய தர்மகர்த்தாவின் அனுமதியோடு ஐயன் புகழினையும், அருளினையும் அடியார்க்குக் கூறுமாறு அன்போடு வேண்டி நின்றேன். அவரும் ஐயனின் புகழைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார். பக்தர்களின் ஆர்வம் எங்கள் இருவர் உள்ளத்திலும் ஒரு விதையாக விழுந்தது. அடுத்த ஆண்டு மண்டல விரத காலத்தில் இவ் ஐயன் ஆலயத்தில் சரணக்கோவை, ஐயப்ப கவசம், விரதவிதி, வரலாறு, பாடல்கள் என்பவற்றை உள்ளடக்கி ஒரு புத்தகம் வெளியிட வேண்டும். அந்த விதை ஐயனின் மட்டற்ற கருணையால் மலராகி உங்கள் கரங்களில் தவழ்கின்றது. இந்தப் புத்தகம் உருவாக்குவதற்கு அவர் பட்ட கஷ்டங்களை, அவர் எடுத்த முயற்சிகளை நான் அருகிருந்து அறிந்தவன். ஒரு புத்தக உருவாக்கம் என்பது மிகக் கடினமான பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியை மிக விருப்பத்தோடும், ஆர்வத்தோடும் செய்து வருபவர் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா அவர்கள். அவர் வெளியிட்ட நூல்கள் சாட்சி.

சபரிமலை ஐயப்பன் ஆலயத்தைப் போல இலங்கையில் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக வழிபடப்பட்டு வருகின்றன. இவ்வாலயமும் அத்தகைய சிறப்புக்குரியது. தொடர்ச்சியான யுத்த நிலைமையினால் இப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், வெளிநாட்டிலும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் இவ்வாலய பரிபாலனம் மிகச் சிரமங்கள் மத்தியில் நடைபெற்று வருகின்றது. இன்று வழிபடுபவர்களை ஐயன் ஐயப்பனுக்குரியவர்களாக வளர்க்கவேண்டிய தேவை உணர்ந்து இந்நூல் வெளியிடப்படுகின்றது. இவ்வரலாற்றுக்குரியவர்களே உங்கள் ஐயப்ப ஆலயத்தை வளர்ப்பதற்கு அவர் அருளை எல்லோரும் பெறுவதற்கு நீங்கள் மனம் வையுங்கள். வளர்ச்சிக்கு மனதார உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள்.

எங்கெல்லாம் ஐயப்ப நாமம் ஒலிக்கின்றதோ அங்கெல்லாம் எம்பணி இருக்க சபரீவாசனே அருள் செய்ய வேண்டும். இந்நூலாசிரியர் உண்மையான ஐயப்ப பக்தனாக, ஐயப்ப தொண்டனாக என்றும் வாழ 18ஆம் படி கொண்ட வாசனை வேண்டி நிற்கின்றேன்.

"என்செயல் எதுவும் இல்லை
எல்லாம் நின்செயல்"

மகேசன் சாமி (கி.மகேஸ்வரன் ஆசிரியர்)
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# முன்னுரை



"ஓம் கன்னிலே கணபதி பகவானே சரணம் ஐயப்பா"

மாதா பிதா குரு தெய்வங்களின் பாதங்களில் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகன் துணை நிற்க,துத்தியில் ஐயன் முன்னிற்பராக

வடமாகாணம் யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை பிரதேசத்தில் கட்டுவன் கரண்டைக்குளம் என்பது சைவப் பேரூராகும். இப் பேரூரின் பழம்பெருமைகளை எல்லாம் எடுத்துக்காட்டுகின்ற இவ்வூர் மக்களை, இந்நாட்டு மக்களை, திருவருள் துணைகொண்டு வாழச் செய்து வருபவர் கட்டுவன் கரண்டைக்குளம் ஸ்ரீசபரி கிரீஸ்வர ஐயப்ப சுவாமி ஆவார். இவ் ஆலயத்தை நெறிப்படுத்தி நடத்துவதற்கு சிவஸ்ரீ அருணாசல குருக்கள் குருசாமி ஐயா அவர்களுக்கு கிடைத்தது அவர்கள் மூதாதையர் செய்த பெரும்பேறாகும். ஐயனின் திருப்பெயரால் இன்று உலகினில் பல்லாயிரம் கோடி மக்கள் சாமியே சரணம் ஐயப்பா என்ற சரண கோஷம் ஒலிக்க சாமி நாமம் கொண்டு சபரிமலை சென்று கொண்டு இருக்கிறார். இக்காலம் அவர்களுக்கு ஓர் பொற்காலமாகும். இவ்வண்ணம் உணரும்படியாக "சபரிகிரீஸ்வரம்" எனும் அருள் நூல் ஐயப்பனுடைய வரலாற்று பெருமைகளை எடுத்துரைக்கின்றது இதற்கு குருவின் ஆசியும் ஐய்பன் திருவருளுமே காரணமாகும்.

இப்பகுதி வாழ் மக்கள் ஐயன் திருவருளை பருகுவதற்கு அவன் துணைகொண்டு பெருவாழ்வு வாழ்வதற்கு இந்நூல் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. இச் சிவப்பணி சிறக்க சந்தர்ப்பம் கிடைத்ததும்,சுவாமியை சரணடைந்து சாமியே சரணம் ஐயப்பா என்று கூவிஅழைத்த சரணாகதி தத்துவத்திற்கு கிடைத்த திருவருளே ஆகும் ."சபரிகிரீஸ்வரம்" உருப்பெறுவதற்கு பேருதவிபுரிந்த,இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல், இராஜபுரம்

இல,105 மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம்,க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் மருத்துக்கடை இல 74 பெரியகடை யாழ்ப்பாணம்.,அற்புதாஸ் களஞ்சியம் ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி ஆகியவற்றின் உரிமையாளர்கள்,பணியாளர்கள்,அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் சபரிமலை தர்ம சாஸ்தாவின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஐயன் திருப்பாதங்களை வழுத்தி இறைஞ்சுகின்றேன்.

சாமியே சரணம் ஐயப்பா

"சபரீஷவாசம்"

ஈழவூர் சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர்

**சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா M.A., J.P.**

கிளுவானை வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை செல்லும் மாலையணிந்த சாமிமார்கள் விரத காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

01. சபரிமலை செல்ல மாலை அணிபவர்கள் கார்த்திகை தமிழ் மாதம் முதலாம் திகதி மாலை அணிதல் வேண்டும். அன்று அணியத் தவறும் பட்சத்தில் கார்த்திகை மாதம் 1-5 இற்குள் மாலை அணிதல் வேண்டும்.

02. மாலை அணிந்தால் தொடர்ந்து 45 நாட்கள் அல்லது தை மாதம் தமிழ் மாதப் பிறப்பு மகரஜோதி பெருவிழா வரை விரதம் இருந்து மாலை கழற்றல் நிகழ்வுடன் விரதம்பூர்த்தியாக வேண்டும்.

03. சபரிமலை விரதத்திற்கு மாலை அணிவதற்கு ஓர் குருசுவாமியின் உதவியை நாட வேண்டும். அவர் பல தடவைகள் சபரிமலையில் பதினெட்டுப்படி பூசை செய்தவராகவும் பல சுவாமிமார்கள் தன்னுடன் ஐயனிடம் அழைத்து சென்று வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

04. குருசுவாமியின்றி மாலை போடுவதாய் இருந்தால் கோவிலிலோ அல்லது இல்லத்திலோ சுவாமியின் திருவுருவப் படத்தில் மாலையை வைத்து ஆலய குருவின் உதவியுடன் தாய், தந்தையை வணங்கி தீபம் காட்டி அந்த மாலையை போட வேண்டும்.

05. விரத காலத்தில் கறுப்பு நிற அல்லது நீலநிற வேட்டி, சால்வை போன்ற வஸ்திரங்களை அணிதல் வேண்டும்.

06. உருத்திராட்ச மாலை, துளசி மணிமாலை ஐயப்பன் திருவுருவம் பதித்த பதக்கம் போன்றவற்றை அணிதல் வேண்டும்.

07. நாள்தோறும் விடியற் காலையில் குளிர்ந்த நீரில் குளித்து காலை, மதியம், மாலை போன்ற நேரங்களில் 108 சரணங்கள் சொல்லி ஐயனை துதித்து பஜனைகள் தனியாகவோ, ஐயப்ப சாமிமார்களு டனோ, ஐயப்ப அடியார்களுடனோ சேர்ந்து செய்ய வேண்டும்.

08. விரத காலத்தில் பிரமச்சாரியம் கடைப்பிடித்தல் அவசியம்.

09. மனம், மொழி, செயல் ஒன்றிலும் தீய எண்ணம் இருத்தல் கூடாது.

10. விரத காலத்தில் முடி, நகம், வெட்டிக்கொள்ளுதல் , முகச்சவரம் செய்தல், குடை, பாதணி போன்றவற்றை பயன்படுத்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சூது, வாது, பொறாமை, வஞ்சம், கள்ளத்தன்மை, மது அருந்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலை போடுதல், சினம், கோபம், கொல்லுதல், புலால் உண்ணுதல் முதலியவற்றை அடியோடு விலக்க வேண்டும்.

12. ஐயன் மாலை அணிந்த பின் எங்கும் எதிலும் ஐயப்பன் என்ற நினைவு மனதில் உதிக்க வேண்டும்.

13. சுவாமியே சரணம், ஐயப்பன் சரணம் என்று சொல்லி ஒருவருடன் பேசவோ கதைக்கவோ தொடங்குமுன் ஐயன் நாமம் சொல்ல வேண்டும்.

14. மாலை அணிந்து கொண்டபின் எக்காரணம் கொண்டும் கழற்றக் கூடாது. உறவில் இறந்தால் ஈமச்சடங்குக்கு கலந்துகொள்ள வேண்டுமென்றால் ஐயனை வணங்கி மன்னிப்புக்கோரி மாலை யைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிவிட வேண்டும். பின்பு விரதம் முடியும் வரை இடையில் மாலை அணியக்கூடாது.

15. மாலை அறுந்தால், பழுதடைந்தால் வேறு மாலையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

16. விரத காலத்தில் பகலில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

17. படுக்கும் பொழுது கட்டில், மெத்தை, தலையணை போன்றவற் றைப் பயன்படுத்தல் கூடாது.

18. மண்டலபூர்த்தி முடிந்தபின் மிகுதி நாட்கள் ஐயப்பனை காணும் நாளாக கருதப்படும்.

19. மாலை போட்ட சாமிமார்கள் வீதியில் உலாவும் போதோ, பயணம் செய்யும் போதோ அவர்கள் முன் தென்படுபவர்கள் யாராக இருந்தாலும் ஐயப்பனாகவே கருதப்படுவார்கள்.

20. சாமிமார்கள் குடும்ப உறவினருக்கோ, மற்றவருக்கோ ஓர் ஈக்கால்கூட அடித்து துன்புறுத்தக்கூடாது.

21. மாலை அணிந்த பின் சந்திக்கும் ஆண்களை ஐயப்பன் என்றும் பெண்களை மாளிகைப்புறத்து அம்மன் என்றும் சிறுவர்களை மணிகண்டன் என்றும் சிறுமிகளை மஞ்சமாதா என்றும் அழைக்க வேண்டும்.

22. ஒவ்வொரு நாளும் குருசுவாமியின் சொற்படி பஜனை பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. நாள்தோறும் ஆலயத்திலோ, வீட்டிலோ பஜனை வழிபாடு முடிந்தவுடன் சாமிகள், குருசுவாமிகள் ஆகியோருக்கு பாத பூஜை செய்ய வேண்டும்.

24. முதலில் மாலைபோட்ட சாமிகள் தனது இல்லத்தில் மற்றைய சாமிகளையும் குருசுவாமிகளையும் அழைத்து ஐயப்பனுக்கு உகந்த அன்னப்பிரபுவைக் காண அன்னதானம் வழங்க வேண்டும்.

25. சாமிமார்கள் சமைத்த உணவுகளையே உட்கொள்ள வேண்டும் அல்லது மனைவியோ, தாயோ சமைத்த உணவை உட்கொள்ள வேண்டும்.

26. இருமுடிகட்டு பூஜை வீட்டிலோ, அல்லது கோயிலிலோ அல்லது குருசுவாமி வீட்டிலோ நடத்த வேண்டும். கணபதி பூஜை நடத்தி ஐயப்பனுக்கு பூஜை செய்து குருசுவாமியை வணங்கி பெற்றோர் களை வணங்கி ஐயப்பன் சரணங்கள் சொல்லிக் கொண்டு கட்டு நிறைக்க வேண்டும்.

27. சபரிமலைக்கு போகிறேன் என்று சாமியே சரணம் என்ற சரணகோஷம் எழுப்பி மலைக்கு புறப்பட வேண்டும்.

28. இருமுடி சுமந்து யாத்திரை செல்லும் போது வீட்டு வாசலிலே தேங்காய் உடைத்து பின் புறமாக திரும்பிப் பாராது செல்ல வேண்டும்.

29. கன்னி ஐயப்பமார்கள் யாத்திரை புறப்படுமிடத்தில் இருந்து சந்நிதானம் வரை இருமுடியை தாமே இறக்கவோ ஏற்றவோ கூடாது. மூத்த ஐயப்ப சாமிமார்கள் அல்லது குருசுவாமியின் உதவியைப் பெற வேண்டும்.

30. சபரிமலைக்கு செல்லும் பாதையில் சரணம், சாமியே சரணம் என்ற கோஷம் ஒலிக்க வேண்டும்.

31. பம்பை நதியிலே நீராடி நம்முன்னோர்களின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

32. குருசுவாமிக்கு தெட்சணை கொடுக்க வேண்டிய சமயங்களில் ஐயப்பசுவாமிமார்கள் தங்கள் வசதிக் கேற்றவாறு கொடுத்து குருசுவாமியின் அருளைப் பெற வேண்டும். இதில் எந்தவித நிபந்தனையும் கிடையாது.

33. ஐயப்ப சுவாமிமார்கள், கன்னிச்சாமிமார்கள் பெரு வழிப்பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் (அழுதை வழி) சென்று வருவது மிகவும் நற்பலனை அளிக்கும்.

34. யாத்திரையில் மகரஜோதியை தரிசித்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் திருவருள் பிரசாதத்தினை தலையில் ஏத்தியபடி வாயிற்படியில் தேங்காய் அடித்து வீட்டிற்குள் செல்ல வேண்டும். பின்பு பூஜை அறையில் கற்பூர ஆராத்தி காட்டி கட்டினை அவிழ்த்துப் பூஜை செய்து பிரசாதங்கள் எல்லோருக்கும் வழங்க வேண்டும். பின்பு பதினெட்டாம்படி பூஜை பாட்டுப்பாடி கடைசியில் மங்களம் பாட வேண்டும்.

35. குருநாதர் மூலமாக மாலையைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு அணிவித்து விரதத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருள் எல்லோருக்கும் எல்லா வரமும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்து ஐயனை வணங்க வேண்டும்.

36. சாமிமார்கள் கறுப்பு, நீல நிற வேட்டிகளை அணிய வேண்டும். விரதமம் முடியும்வரை வேறு ஆடை வகைகள் அணியக்கூடாது.

37. சாமிகள் மண்டல பூர்த்தி பூஜைகள் யாவும் முடிந்தவுடன் மாலை கழற்றுவதற்கு குருசாமியின் உதவியை நாட வேண்டும். குருசாமி இல்லாத பட்சத்தில் குருசாமி தனக்குப் பதிலாக வேறு குரு சாமியை நியமிக்க வேண்டும். அவர் மூலம் மாலை கழற்றும் நிகழ்வு நிறைவு பெறும்.

38. இவ்வளவு விதி முறைகளை கடைப்பிடித்தால் நீங்கள் கேட்கும் வரம் நிச்சயமாக ஐயனிடம் பெறுவீர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை அணியும் பொழுது கூற வேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம்!
வன முத்ராம் சுத்த முத்ராம் ருத்ரமுத்ராம் நமாம்யஹம்!!

சாந்த முத்ராம் சத்யமுத்ராம் வருக முத்ராம் நமாம்யஹம்!
சபர்யாச்ராம் ஸத்யேன முத்ராம் பாது ஸதாபி மே!!

குருதக்ஷிணாயா பூர்வம் தஸ்யா நுக்ரஹ காரிணே!
சரணாகத முத்ராக்யம் த்வன் முத்ராம் தாரயாம்யஹம்!!

சின்முத்ராம் கேசரீ முத்ராம் பத்ராம் சமாம்யஹம்!
சபர்யாசல முத்ராயை நமஸ் துப்யம் நமோ நம:!!
அபூர்வ ம்சலா ரோஹ – திவ்ய தர்சன காரணம்
சாஸ்த்ரு முத்ராத் மஹாதேவ – தேஹிமே வ்ரத விமோசனம்

## மாலை கழற்றும் பொழுது கூற வேண்டிய மந்திரம்

அபூர்வ மசலா ரோஹ – திவ்ய தர்சன காரணம்
சாஸ்த்ரு முத்ராத் மஹாதேவ – தேஹிமே வ்ரத விமோசனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
# நூற்றெட்டு சரணக்கோவை கோவை

மாலை அணிந்த ஸ்வாமிமார்கள் இந்த சரண கோஷத்தை தினமும் காலை,மாலை இரண்டு வேளையும் நீராடிவிட்டு ஐயப்பனிற்கு பால், பழம்,கற்கண்டு முதலியவற்றை நிவேதனம் செய்து சரணம் சொல்லி வழிபடவேண்டும்.

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச்சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப்பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினைகள் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப்பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | ஸௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுகவரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணிகண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம்நிறை மெய்ப்பொருளே | சரணம்ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலை கொணர்ந்தவனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இருமுடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி தர்மசாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம்ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேரூத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காளைகட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு பஜனைப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப்பாறைக்கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்ரீராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்திபூஜைக் கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீபஜோதித் திருஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம்ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம்ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சிமேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக்குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரி பீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கடுத்தசாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராஜாப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அலங்காரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சற்குருநாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மகரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மங்களமூர்த்தியே | சரணம் ஐயப்பா |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் ஸ்வாமியே சரணம்
# ஐயப்பாஸ்ரீ ஐயப்பன் கவசம்
## காப்பு

அரிஹர புத்திரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
அனுதினம் போற்றி பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதர ஐயப்பா வருக 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக 2

பூத நாயகா வருக வருக
புஸ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக 3

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனை யாட்கொள்ள

இருமூர்த்தி மைந்தா வருக வருக 5
பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே 6

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே 7

பம்மைபியன் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் கள்எல்லாம் பணிந்தே வணங்குவார்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர் 8

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 9

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணண் பலன் நாசியைக் காக்க 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக்காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகன் பூஜீயன் நாவினைக் காக்க 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஸ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க 12

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினை காக்க 13

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க 15

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க 16

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க 18

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க 19

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் 20

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் 21

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா 22

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா 23

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோமம் துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் 25

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினமும் சொல்ல அருள் தருவாயே 26

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ 27

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
கரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷிமர்த்தனா மணிகண்டா நமோ நமோ 28

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 29





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பாடல்



பாடல்-01

சரணம் கணேசா

சரணம் கணேசா சரணம் கணேசா
சரணம் கணேசா சரணம் கணேசா சரணம்

சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சங்கட நாசனா சரணம் கணேசா சரணம்

சம்பு குமாரா சரணம் கணேசா
சண்முகன் சோதரா சரணம் கணோசா சரணம்

விக்ன விநாயகா சரணம் கணேசா
வேழ முகத்தோனே சரணம் கணேசா சரணம்

பார்வதி பாலனே சரணம் கணேசா
பக்தர்க் கருள்வாய் சரணம் கணேசா சரணம்

ஐந்து கரத்தானே சரணம் கணேசா
அடியாக் கருள்வாய் சரணம் கணேசா சரணம்

பானை வயிற்றோனே சரணம் கணேசா
பாதம் பணிந்தோம் சரணம் கணேசா சரணம்

மூஷிச வாகனா சரணம் கணேசா
முன்னின்று காப்பாய் சரணம் கணேசா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருப்பாடல்

பாடல்-02

விழிகிடைக்குமா அபயகரம் கிடைக்குமா
குருநாதன் சரணத்தின் நிழல் கிடைக்குமா
அலைமீது அலையாக துயர் வந்து சேரும்போது
அஞ்சாதே எனும் குரலே செவிகேக்கும் (விழி)

நங்கூரம் போல் குருநாதன் நீயிருக்க
சம்சார புயல்கண்டு மனம் அஞ்சுமோ
நிஜமான அன்பு வைத்து எனதெல்லாம் அடியால் வைத்தாய்
வழியோரப்படகில் எனக்கிடம் கிடைக்குமோ (விழி)

கோடி ஜென்மம் நானெடுப்பேன்குருநாதன் துணையிருந்தா
குணக்குன்று உறையாக எனை யாக்குவேன்
நினைக்காத துன்பம் பல எனை வந்து சேரும்போது
நினைத்தாலே அபயம் தரும் கரம் கிடைக்குமா (விழி)

## சிவன் பாடல்



பாடல்-03

உலகமெல்லாம் நீ இருப்பாய் சிவபெருமானே - நல்ல
உள்ளமெல்லாம் மலர்ந்திருப்பாய் - சிவபெருமானே - (உலக)
கலைகளிலே கலந்திருப்பாய் சிவபெருமானே - காணும்
காட்சியிலும் நிறைந்திருப்பாய் சிவபெருமானே.

கற்பனையில் உன்வடிவம் காண வராது - பெறும்
கனவுகளில் உன் அருளும் கூடவராது
அற்புதங்கள் செய்வதிலும் பக்தி வராது - உந்தன்
அடியவராய் இருப்பவர்க்கே துன்பம் வராது (உலக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கரும்பில் எங்கிருந்து சர்க்கரை வைத்தாய் - சுவை
சேர்த்து தரும் மாங்கனியை என்று படைத்தாய் - இந்த
வேப்பிலை கசப்பதற்கு என்ன கொடுத்தாய்.... எந்த
விளையாட்டைக்காட்டி எம்மை மயங்க வைத்தாய். (உலக)

# அம்மன்
# மாளிகை புரத்து அம்மா



பாடல்-04

மாளிகை புரத்தம்மா மஞ்சமாதாவே - உன்
மலரடியை தாழ்பணிந்தோம் மஞ்சமாதாவே
தேங்காயை உருட்டிஉன்னை பார்க்க வந்தோமே - உன்
திருவடிக்கே தாழ்பணிந்தோம் மஞ்சமாதாவே (மாளிகை)

ஐயனும் கானகத்தில் வந்ததினாலே - உன்
மகிஷிவேஷம் கலைந்ததம்மா மஞ்சமாதாவே
கன்னிச் சாமிகளும் சபரிமலைக்கு வந்ததினாலே - உன்
கன்னிவேஷம் நிலைத்ததம்மா மஞ்சமாதாவே (மாளிகை)

வாவர்தேவனை வழியினில் வைத்து - நீ
வன்புலிமேல் அமர்ந்திட்டவன் பக்கம் இருப்பாய்
காதோலே கருகமணி கொண்டு வந்தோமே - நீ
காலமெல்லாம் கன்னியாக காத்திருப்பாயே (மாளிகை)

மகரமகா சங்ராந்தி தினத்தன்று - நீ
மணிகண்டனை பார்க்கவந்தாய் மஞ்சமாதாவே
சரங்கள்வந்து மேட்டினிலே குவிந்ததினாலே - உன்
சங்கடங்கள் தீராதம்மா மஞ்சமாதாவே (மாளிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளுடன் மலர்களையும் தூவி வந்தோமே - எங்கள்
மாதர்களின் மஞ்சள்கயிற்றை காத்திடுவாயே - உன்
மகிமையுள்ள மஞ்சளுடன் சந்தனம் சேர்த்து
மனதார பூசிவந்தோம் மஞ்சமாதாவே (மாளிகை)

## சமயபுரம் மாரியம்மா

பாடல்-05

சமயபுரத்தாளே மாரியம்மா..... அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா (சமய)

1. மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம் - அரிசி
மாவிளக்கு ஏற்றிவைத்து பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாரமம்மா - அம்மா
தூயவளே என்தாயே மாரியம்மா (சமய)

2. பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டுவந்தோம்
எட்டு திசைகளையும் ஆண்டவளே - அம்மா
ஈஸ்வரியே என்தாயே மாரியம்மா (சமய)

3. கத்தி கதறுகிறோம் கேட்கலையோ - தாயே
கல்லேதான் உன்மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே - எங்கள்
உமையவளே தாயே மாரியம்மா (சமய)

4. காலிற் சலங்கை ஒலி காதைத் துளைக்குதம்மா
பாவாடை தாவணியும் தானாக ஆடுதம்மா
பூவாடை வீசுதம்மா பூமகளே - உனக்கு
பாமாலை கொண்டு வந்தோம் பாரம்மா (சமய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன்



பாடல்-06

சரணமே சரணமே ஐயப்பசாமி (மெட்டு 1)
அரோகரா அரோகரா சண்முகசாமி

தன்னா னன்ன னான அவர் ஐயப்பாசாமி (மெட்டு 2)
தில்லா லே லேலோ அவர் சண்முகச்சாமி

பம்பையில் உதித்தவராம் ஐயப்பசாமி
பொய்கையில் உதித்தவராம் சண்முகச்சாமி (தன்னா)

திருமாலின் திருமகனாம் ஐயப்பசாமி
திருமாலின் மருமகனாம் சண்முகச்சாமி (தன்னா)

புலியேறி வருபவராம் ஐயப்பசாமி
மயிலேறி வருபவராம் சண்முகச்சாமி (தன்னா)

இருமுடி பிரியராம் ஐயப்பசாமி
காவடி பிரியராம் சண்முகசாமி (தன்னா)

இன்றுவரை பிரம்மச்சாரி ஐயப்பசாமி
இருதாரம் கொண்டவராம் சண்முகச்சாமி (தன்னா)

தைமகர கீர்த்தியவர் ஐயப்பசாமி
தைப்பூச மூர்த்தியவர் சண்முகச்சாமி (தன்னா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ணர்



பாடல்-07

குழந்தையாக மீண்டும் கண்ணன் பிறக்கமாட்டானா
புல்லாங்குழல் ஊதி என்னை மயக்க மாட்டானா
மாடு கன்று காட்டில் ஓட்டி மேய்க்க மாட்டானா
தினம் பாடி ஆடிஓடி என்னை சேர்க்க மாட்டானா (குழந்தை)

சின்னஞ்சிறு வாயை கொஞ்சம் திறக்க மாட்டானா
கண்ணில் இந்த உலகத்தையே காட்ட மாட்டானா
என்னை அவன் தோழனாக ஏற்க மாட்டானா
வெண்ணெயிலே பங்கு போட்டு நீட்டமாட்டானா (குழந்தை)

மலையை எடுத்து குடையை போல பிடிக்க மாட்டானா
என் தலையில் மழை விழுவதையே தடுக்க மாட்டானா
கீதை தன்னை திரும்பவுமே கூற மாட்டானா
அதை கேட்டு நாமும் சிறந்தவராய் மாற மாட்டோமா. (குழந்தை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் பாடல்



பாடல்-08

சுவாமி திந்திக்க தொம் தொம்
ஐயப்பா திந்திக்க தொம் தொம்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
போனால் சபரிமலை கேட்டால் சரணகோசம்
பார்த்தால் மகரஜோதி பார்க்க வேண்டும் - நான்
பார்த்தால் மகரஜோதி பார்க்க வேண்டும் (பேனால் 4)

மண்டல காலத்தில் மாலை அணிந்து
சாமிசரணம் ஐயப்ப சரணம்
மணிகண்டன் நாமம் தினமும் நினைந்து
சாமிசரணம் ஐயப்ப சரணம்
இருமுடி தாங்கி எலிமேலி சென்று
சாமி சரணம் ஐயப்ப சரணம்
பேட்டை ஆடி நாங்க வருவோம்
சாமி சரணம் ஐயப்ப சரணம்.

(போனால் சபரிமலை)

பிட்டும் எடுத்தும் காட்டில்நடந்து
சாமி சரணம் ஐயப்ப சரணம்
அழுதா நதியில் கல்லும் எடுத்து
சாமி சரணம் ஐயப்ப சரணம்
கல்லிடும் குன்றில் போட்டும் நாங்கள்
சாமி சரணம் ஐயப்ப சரணம்
கரிமலையில் ஏறியே வந்தோம்
சாமி சரணம் ஐயப்ப சரணம்

(போனால் சபரிமலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பை நதிக்கரை விளியும் வைத்து
சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
பம்பை விளக்கை தொழுது நாங்கள்
சாமி சரணம் ஐயப்ப சரணம்
மகரஜோதி நாளில் உன்னை
சாமி சரணம் ஐயப்ப சரணம்
கண்டு தொழவே வந்திடுவோம்
சாமி சரணம் ஐயப்ப சரணம்

(போனால் சபரிமலை)

பாடல்-09

கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
அரிகர சுதனே சரணம் ஐயப்பா
அச்சங்கோயில் ஆண்டவனே சரணம் ஐயப்பா
அனாதை ரட்சகனே சரணம் ஐயப்பா
சாமியெ ஐயப்போ, சாமி சரணம் - ஐயப்பா சரணம்
வில்லாளி வீரனே - வீரமணி கண்டனே
சாமியே ஐயப்பா, சாமி சரணம் - ஐயப்பா சரணம்

எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ (எல்)
ஐயனின் நாமத்தை ஐயப்பன் நாமத்தை (ஐய)

எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ ஐயப்பன் நாமத்தை (எல்)
சரணம் ஐயப்பா, சாமி சரணம் ஐயப்பா சரணம் (சரணம்)

முத்துமணி பவளநகை புன்சிரிப்பை பாருங்கோ
மாதவனை மெய்யப்பனை மனம் மகிழ்ந்து பாடுங்கோ (முத்து)

குழந்தை உள்ளம் கொண்டவனை கோடி மக்கள் பாடுங்கோ (குழந்)
அழகு மலை ஓடிவந்து அபிஷேகம் செய்யுங்கோ (அழகு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதெல்லாம் கொடுப்பவனை கீர்த்தியுடன் பாடுங்கோ (கேட்)
நினைத்ததெல்லாம் முடிப்பவனை பக்தியுடன் நாடுங்கோ (நினை)
நாட்டமுடன் பதினெட்டுப் படியேறி கூடுங்கோ (நாட்)
பந்தள குமரனை பணிவுடன் பாடுங்கோ (பந்தள)

பாடல்-10

சரணம் சரணம் சரணம் சரணம் ஸாவாமி அய்யப்பா - என்
சந்ததியே உன் அடிமை சுவாமி ஐயப்பா (சரணம்)

பக்தியோடு உனைத் தொழுவோர் பக்கமிருப்பாய் - உண்மை
பக்தருக்கு காவலென நாளுமிருப்பாய்
வித்தகனே தத்துவமே ஸ்வாமி ஐயப்பா - உன்
விழிக்கருணை வேண்டுகிறோம் சரணமய்யப்பா (சரணம்)

சரணம் என்று சொல்பவர்க்கு சலனமில்லையே - உன்
தங்கமேனி காண்பவர்க்கு சபலமில்லையே
மரணமென்ற போதும் ஒரு மயக்கமில்லையே - உன்
மலையில் ஏற எந்த நாளும் தயக்கமில்லையே (சரணம்)

மாலை பொட்ட மனிதன் அன்று தூய்மையாகிறாள் - சபரி
மலையேறித் திரும்பும் வரை சாமியாகின்றான்
கோழை கூட சரணம் என்றால் துணிவு கொள்கின்றான் - ஒரு
கோபமின்றி யாருடனும் பணிவு கொள்கின்றான்

பக்தியோடு உனைப் பணிவோர் பக்கமிருப்பாய் - உண்மை
பக்தருக்கு காவல் என நாளுமிருப்பாய்
வித்தகனே தத்துவமே ஸ்வாமி ஐயப்பா - உன்
விழிக்கருணை வேண்டுகின்றோம் சரணமய்யப்பா
சரணம் சரணம் சரணம் சரணம் ஸ்வாமி ஐயப்பா - என்
சந்ததியே உன் அடிமை ஸ்வாமி ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்-11

கன்னிமூலை கணபதியை வேண்டிகிட்டு - நாங்க
கார்த்திகை முதல்தேதி மாலையிட்டோம் (கன்)
ஐயப்பா ஐயப்பா என்றேசொல்லி - நாங்க
ஆறு வாரம்தானே நோன்பு மிருந்தோம் (நாங்க) (கன்னி)

குருசாமி துணைகொண்டு அவர்பாதம் நம்பிகிட்டு
இருமுடியை சுமந்துவிட்டு வந்தோமையா எங்க (குரு)
ஆறுபடை வீடுசென்று கந்தனையே வேண்டிகிடு
யாத்திரையாய் நடந்து வந்தோமையா நாங்க (யாத்) (கன்னி)

குருவாயூர் கோவில்முதல் கன்யா குமரிவரை
தெரிசனமே செய்துகிட்டு வந்தோமையா நாங்க (குரு)
எருமேலி பேட்டைத்துளி வாவரையே வேண்டிக்கிட்டு
பேரூர் தோட்டில் பொரி போட்டு வந்தோமையா நாங்க (கன்னி)

காளைகட்டி அஞ்சல்வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமையா - நாங்க (காளை)
பம்பையிலே குளித்துவிட்டு பாவங்களை தொலைத்துகிட்டு (பம்பை)
நீலிமலை ஏறிக்கிட்டு வந்தோமையா - நாங்க (நீலி) (கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானேஉனைவேண்டி
கற்பூர ஜோதிதன்னை கண்டோமையா - நாங்க (பதி)
மகரஜோதியைகண்டு மனமாற சரணம்போட்டு (மகர)
மணிகண்டா உன்மகிமை அறிந்தோமையா (மணி) (கன்னி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்-12

நெய்தேங்காய் அடைத்து வந்தோம் ஐயப்பா - உன்னை
நேரில் காண ஓடிவந்தோம் ஐயப்பா-ஐயப்பா
இருமுடியை சுமந்து வந்தோம் ஐயப்பா -உன்
இருப்பிடத்தை நாடி வந்தோம் ஐயப்பா-ஐயப்பா (நெய்)

காடுமலை கடந்து வாரோம் ஐயப்பா-நாங்கள்
கடும்விரதம் இருந்து வாரோம் ஐயப்பா
குருசாமி கூடவாரோம் ஐயப்பா எங்கள்
குற்றம் குறை சொல்லிவாரோம் ஐயப்பா - ஐயப்பா (நெய்)

எருமேலி பேட்டை துள்ளி ஐயப்பா - நாங்கள்
ஏறிவாரோம் சபரிமலை ஐயப்பா - ஐயப்பா
கண்கள் கலங்குதப்பா, கண்ணீரும் பெருகுதப்பா (கண்கள்)
கண்திறந்து பாருமப்பா ஐயப்பா - எங்கள்
கவலைகளை தீருமப்பா - ஐயப்பா - ஐயப்பா (நெய்)

பாட்டு -13

நிலாவில்ஒளிவீசும் நின்னுடைய நீலவானம் ஐயா - இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும் உந்தன் நாமம் ஐயா - ஆ.ஆ
(நிலா)
மலைகள்கடந்து வந்தோம் ஐயப்பா மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா அமைதிதாராயோ - ஓ-ஓ
(நிலா)
வனங்கள் கடந்து வந்தோம் எமக்கொர மார்க்கம் அருளாயோ
இருளை அகற்றிடவே என்வாழ்வில் இன்பம் தாராயோ - ஓ-ஓ (நிலா)

நியமம் ஒன்றறியேன் நின்னடியார் நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா கருணைபுரிவாயொ - ஓ-ஓ-(நிலா)

மீண்டும்இந்திரனை விண்ணவரின் வேந்தன் ஆக்கிவைத்தாய்
வேண்டும் பொழுதெல்லாம் ஐயப்பா வில்லுடன் வாராயோ - ஓ- ஓ -(நிலா)

மதுராபுரிவதனா ஐயப்பா மதனமோகனனே - வணங்கும்
குருமுனிவர் நன்மொழியால் மகிழும் சிவமணியே - ஏ-ஏ (நிலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு – 14

தாலாட்டு பாடவா தாளம்பல போடவா
கோலாட்டு அடிக்கவா கும்மிபல கொட்டவா

அச்சங்கோவில் அரசனாம் அச்சம் தீர்க்கும் தெய்வமாம்
ஆரியங்காவு ஐயனாம் ஆதரிக்கும் தெய்வமாம் (தாலாட்டு)

குளத்துப்புழை பாலகனாம் குறைகளை தீர்ப்ப வனாம்
எரிமேலி நாதனாம் எங்கள்குல தெய்வமாம் (தாலாட்டு)

வாபர்சுவாமி தோழனாம் வன்புலி வாகனனாம்
காளைகாட்டி நாதனாம் காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

அழுதமலை ஏற்றமாமம் அழுதமலை இறக்கமாம்
கரிமலை ஏற்றமாம் கரிமலை இறக்கமாம் (தாலாட்டு)

பம்பையின் ஜோதியாம் பந்தள ராஜனாம்
நீலிமலை ஏற்றமாம் நித்திய பிரம்மச் சாரியாம் (தாலாட்டு)

பாட்டு –15

சன்னதியில் கட்டுங்கட்டி தன்னா னன்ன னான – நாங்க
சபரிமலை பயணமுங்க தில்லா லே லேல்லோ (சன்னதி)

கார்த்திகையில் மாலைபோட்டு தன்னா னன்ன னான – நாங்க
கடும்பயணம் போறோமுங்க தில்லா லே லேல்லோ (சன்னதி)

மார்கழியில் கட்டும்தாங்கி தன்னா னன்ன னான – நாங்க
மணிகண்டனைப் பார்க்கப்போறோம் தில்லா லே லேல்லோ (சன்னதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருமேலியில் பேட்டை துள்ளி தன்னா னன்ன னான - நாங்க
ஏறிடுவோம் சபரிமலை தில்லா லே லேல்லோ (சன்னதி)

அழுதையில் ஸ்நானம் செய்து தன்னா னன்ன னான - நாங்க
அன்னதானம் இட்டிடுவோம் தில்லா லே லேல்லோ (சன்னதி)

பம்பையில் ஸ்நானம் செய்து தன்னா னன்ன னான - நாங்க
பாவங்களை தீர்க்கபோறோம் தில்லா லே லேல்லோ (சன்னதி)

ஐந்து மலைகடந்து தன்னா னன்ன னான - நாங்க
ஐயப்பனை காப் போகிறோம் தில்லாலே ஏலோ (சன்னதி)

மலையாம் மலைகடந்து தன்னா னன்ன னான - நாங்க
மகர ஜோதி காணப்போகிறோம் (சன்னதி)

பதினெட்டாம் படி ஏறி தன்னா னன்ன னான - நாங்க
பரவசமாய் ஆகிடுவோம் தில்லாலே ஏலோ (சன்னதி)

பாட்டு -16

காத்து ரக்ஷிக்கணும் கன்னிமார்களை கன்னிமூல கணபதியே
பாத்து ரக்ஷிக்கணும் பரிவுகாட்டணும் கன்னிமூல கணபதியே
காத்துரக்ஷிக்கணும் கருணைகாட்டணும்
பொன்னுபகவதியெ அம்மா பொன்னு பகவதியே பாத்து
ரச்சிக்கனும் பரிவு காட்டனும் பொன்னு பகவதி
அம்மா பொன்னு பகவதியே
மாளிகை புறத்து மஞ்சம்மா மாணிக்கபாதம் தஞ்சம் அம்மா (மாளிகை)

நெய் மணக்குது மெய்யிருக்குது சபரிமலையிலே
அய்யனே உந்தன் அழகைக் கண்டால் பக்தி
பிறக்குது உள்ளத்திலே ஞானசக்தி பிறக்குது உள்ளத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்ய பிஷேகம் செய்யும்போது மெய்சிலிர்க்குது மலையிலே
தையினிலே உந்தன் சந்நதிகாண உள்ளத்தில்
ஆவல் பொங்கிடுதே (தை) (காத்து)

சத்தியமான பொன்னு பதினெட்டு படிபகவானே
ஸ்வாமி பொன்னுபகவானே ஐயப்பா பொன்னுபகவானே
ஷண்முகன் தம்பியே உந்தன் தரிசனம் கிடைக்கவேணுமே
ஸ்வாமியே சரணம் ஐயப்பா என்றுசொல்லி நாங்கள் வந்தோமே
(ஸ்வாமி)

சங்கர மோகினி பாலனே உந்தன் தரிசனம் தனைக்காண
தயைபுரிவாய் தேவனே தயைபுரிவாய் தேவியே
ஸ்வாமியே சரணம் ஐயப்பா ஐயப்பாசரணம் ஐயப்பா (ஸ்வாமி) (காத்து)

பாட்டு –17

ஹரி நின்று அருள்புரியும் ஏழுமலை
ஹரனின்று தவம்செய்யும் கயிலைமலை
ஹரிஹரன் அருள்செல்வன் வாழும்மலை – எங்கள்
ஐயப்ப ஸ்வாமியின் சபரிமலை –இ–இ

மலைபோன்ற வாழ்வருள்வாய் – ஐயப்பா
மணிகண்ட பெருமானே ஐயப்பா
கலைஞான புகழ்தருவாய் ஐயப்பா
கண்கண்ட தெய்வம்நீயே ஐயப்பா
சாமியேசரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (சாமியே) (மலை)

கல்லும் முள்ளும் குத்தவில்லை ஐயப்பா – உந்தன்
கருணை உள்ளம் புரிந்ததய்யா ஐயப்பா
தனிமையிலே இனிமை கண்டோம் ஐயப்பா
சரணங்கள் முழங்க வைத்தாய் ஐயப்பா (சாமியே) (மலை)

சத்தியமான பதினெட்டாம் படியப்பா – உயர்
தத்துவத்தை தாங்கும்இரு முடியப்பா
அகங்குளிர பாடிவந்தோம் ஐயப்பா
மகரஜோதி காண வைத்தாய் ஐயப்பா (சாமியே) (மலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகராசா பாடல்

பாட்டு -18

நாதர்முடி மேலிருக்கும் நாகபாம்பே - அங்கே
நச்சுபையை வைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைக்கொள்பாம்பே - நீ
பாடி பாடி நின்றுவினை யாடுபாம்பே
ஆடு பாம்பே விளை யாடு பாம்பே
ஆடுபாம்போ விளையாடுபாம்பே
ஆடு பாம்பே விளை யாடு பாம்பெ (ஆடு பாம்பே)

குற்றமற்ற சிவனுக்கு குண்டலமானாய் - கூறும்
திருமாலுக்கு குடையுமானாய்
கற்றைகுழல் பார்வதிக்கு கங்கணமானாய் - நீ
கறவாலம் மனம்கனந்து ஆடுபாம்பே (ஆடு பாம்பே)

வளைபுகும்போதே தலைபின் வாங்கும்பாம்பே
மண்ணடலமிட்டுடல் வளை வண்ணபாம்பே
தளைக் கஞ்சிநிற்கும் சத்தியபாம்பே
தலையெடுத்தெ நின்றுவிளை யாடுபாம்பே (ஆடு பாம்பே)

மண்டலத்தை தாங்கும்மிக வல்லமை கொண்டாய்
மாயன் படுக்கைக்கே வண்ண பாயானாய்
கண்டபடை நடுங்கிடவே காட்சியும் பெற்றாய்
கண்ணே செவியாக கொண்டு ஆடுபாம்பே (ஆடு பாம்பே)

பாடல்-19

ஆடுராஜா பிரவு நாகராஜா எங்கள்
மணிகண்டன் பெயரைச் சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரவு நாகராஜா எங்கள்
சாஸ்தாவின் பெயரைச் சொல்லி பாடுராஜா

சரணகோசம் போட்டு வரும் பக்தரைப்பாரு
சந்நிதியை நாடி வரும் கூட்டத்தைப்பாரு
ஐயப்பனைப்பாடும் கன்னிச் சாமியைப்பாரு
கருணையுடன் வழிவிடுவார் நிச்சயம்பாரு (ஆடுராஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சனேயர் பாடல்
# பத்துப் படி ஏறி வந்தேன்



பாடல்--20

பத்துப்படி ஏறி வந்தேன் ஆஞ்சநேயனே
வெற்றி தர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
பக்தியுடன் பாடி வந்தேன் ஆஞ்சநேயனே
முக்தி தர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
(பத்துப்படி)

கற்றறிந்த கையளவே ஆஞ்சநேயனே - உன்னால்
பெற்றதிந்த வாழ்க்கையய்யா ஆஞ்சநேயனே
முத்துமணி மாலையில்லை ஆஞ்சநேயனே
மொத்தத்தில் நான் ஏழையய்யா ஆஞ்சநேயனே
பஞ்சமுக தரிசனமே ஆஞ்சநேயனே - கண்ணால்
கண்டுமனம் குளிரவந்தேன் ஆஞ்சநேயனே
(பத்துப்படி)

வஞ்சமற்ற மனம்படைத்தாய் ஆஞ்சநேயனே அதில்
ஆசை விதை ஏன் விதைத்தாய் ஆஞ்சநேயனே
பொய்யுரைத்து வாழ்ந்தறியேன் ஆஞ்சநேயனே - என்
மெய்ப்பொருளும் உன் அருளே ஆஞ்சநேயனே
மூச்சிருக்கும் நாள்வரைக்கும் ஆஞ்சநேயனே - உன்
பேச் செனக்கு வேதமய்யா ஆஞ்சநேயனே
(பத்துப்படி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பன் பாடல்

பாட்டு-21

எங்க கருப்பசாமி - அவர் எங்க கருப்பசாமி
எங்க கருப்பசாமி - அவர் எங்க கருப்பசாமி
அக்னியில் பிறந்தவராம் அரனாரின் மைந்தன் அவன்
எங்க கருப்பசாமி - அவர் எங்க கருப்பசாமி
முன் கொண்டைக்காரன் அவர் முன்கோபக் காரனவன் (எங்க கருப்ப)
சடைமுடி காரனவன் சாமிகளை காத்திடுவான்
சல்லடையை கட்டிவாரான் சாய்ந்த சாய்ந்து ஆடிவாரான் (எங்க)

வில்லுப்பாட்டு பாடி வாரான் விதவிதமாய் ஆடிவாரான்
பந்தம் கையில் பிடித்து வாரான் பாரிவேட்டை ஆடிவாரான் (எங்க)

அச்சங்கோயில் ஆண்டவர்க்கு எதிராக இருப்பவனாம்
18ஆம் படிகளுக்கு காவலாக இருப்பவனாம் (எங்க)

கச்சைய கட்டி வாரான் கை அறுவா காட்டி வாரான்
மீசையை முறுக்கி வாரான் முச்சந்தியில் நடந்து வாரான் (எங்க)

வில்லாளி வீரனுக்கும், வீரமணி கண்டனுக்கும்
இருமுடி சுமக்குபோது பாதுகாக்க வருபவராம் (எங்க)

கற்பூர அழிமுன்னே கடவுளாக இருந்திடுவார்
கருப்பு வேஷ்டி கட்டிக்கிட்டு பாவங்களை போக்கிடுவார் (எங்க)

பாட்டு -22


கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்பசாமி -ஏ-கருப்பசாமி
கருத்தமேகம் போலேவாரான் கருப்பசாமி
அண்ணன்வாரான் தம்பிவாரான் கருப்பசாமி - ஏ கருப்பசாமி
விண்ணதிர மண்ணதிர கருப்பசாமி (கருப்ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாள தேசம்விட்டு கருப்பசாமி - ஏ... கருப்பசாமி
மாடன் மாடத்தியுடன் கறுப்பு சாமி
பிறந்தது எங்கே வளர்ந்தது எங்கே கறுப்பு சாமி
பேரும், ஊரும் சொல்லவரான் கருப்பசாமி (கருப்ப)
வில்லுப்பாட்டு பாடிவாரான் கருப்பசாமி - ஏ கருப்பசாமி
விதவிதமாய் ஆடிவாரான் கருப்பசாமி

மந்தை வறந்தவண்டா கருப்பசாமி -ஏ-கருப்பசாமி
மாபூஜை கொண்டவண்டா கருப்பசாமி (கருப்ப)
ஈன இசக்கியுடன் கருப்பசாமி - ஏ - கருப்பசாமி
இழுத்து கொண்டு வாராண்டா கருப்பசாமி (கருப்ப)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பாடல்கள்

பாடல் – 23

ஒன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஒன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினொன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினான்காம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினெழாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினொட்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

# தீப மங்களம்

தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய சபரி சாஸ்தா நமோ நமோ
பூரண புற்கலை நாத நமோ நமோ
அருள் தாராய் நமோ நமோ (தீப மங்கள)

## சாஸ்தா பஞ்ச ரத்னம்

ஒவ்வொரு ஸ்லோகத்தையும் கூறி "ஸ்வாமியே சரணம் ஐயப்பா" என்று சொல்லி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

மூஷி வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸீத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கன்னி மூல கணபதி
பகவானே சரணம் ஐயப்பா

லோக வீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹருதயானந்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸுதம்
ஷிப்ர ப்ரசாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விகக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பஞ்சரத்னாத்யம் ஏதத்யோ
நித்ய சுத்தப்படேன் நரஹோ!
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சஸ்தா வசதிமானசே!!
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாதா சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்த்ரேதுப்யம் நமோ நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றும்அந்த சன்னதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையோனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யனுக்கு மங்களம்
வெற்றிதரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்
அச்சங்கோவில் அரசனுக்கும் ஆரியங்கா ஐயனுக்கும்
குளத்துப்புழை பாலனுக்கும் குழந்தை மணி கண்டனுக்கும்
எரிமேலி சாஸ்தாவுக்கும் என் குரு நாதனுக்கும்
கன்னிமூலை கணபதிக்கும் காவல்காக்கும் கருப்பனுக்கும்
நாக ராஜனுக்கும் மாலைபுரத்து அம்மனுக்கும்
வாவர் சுவாமிக்கும் வாமணன் மைந்தனுக்கும்
ஆதி சக்தி அம்பிகை ஆனந்தகோடி மங்களம்
ஞானகீதம் ஏற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
மங்களம் ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி மேல் வாழும். ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் சுவாமியே சரணம் ஐயப்பா. காசி, ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம், இலங்கை யாழ்நகர் கோண்டாவில் சபரிவாகம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சாமி சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்டசித்திகளை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலையில்
# ஐயப்பன் சன்னதி நடைசாத்தும் பாடல்

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா (சரண)

ஹரிவராஸனம் விச்வமோஹனம்
ஹரிததீச்வரா ஆராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)

சரணகீர்த்தனம் சக்தமானஸம்
பரணலோலுபம் நர்த்தனாலயம்
அருணாபாஸுரம் பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)

ப்ரணயஸத்யகா ப்ராணநாயகம்
ப்ரணத கல்பகம் ஸுப்ரபாஞ்சிதம்
ப்ரணவமந்திரம் கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)

துரகவாஹனம் ஸுந்தரானனம்
வரகதாயுகம் வேதவர்ணிதம்
குருக்ருபாகரம் கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)

த்ரிபுவனார்ச்சிதம் தேவதாத்மகம்
த்ரிநயனப்ரபும் திவ்யதேசிகம்
த்ரிதசபூஜிதம் சிந்தித ப்ரதம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவபயாபஹம் பாவுகாவஹம்
புவனமோஹனம் பூதிபூஷணம்
தவளவாஹனம் திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)

களம்ருதுஸ்மிதம் ஸுந்தரானனம்
களபகோமளம் காத்ரமோஹனம்
களபகேஸரீ வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)

ச்ரிதஜனப்ரியம் சிந்திதப்ரதம்
ச்ருதிவிபூஷணம் ஸாது ஜீவனம்
ச்ருதிமனோஹரம் கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரண)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் அவதாரம்

விண்ணவர்களின் தலைவனாகிய தேவேந்திரன் மிகவும் களையிழந்த முகத்துடன் பிரம்ம தேவனைக் காண பிரம்ம லோகத்திற்கு சென்றான். அவனைக் கண்ட பிரம்மா, தேவேந்திரனே! நீ இப்படி சோர்வற்று தோற்றமே மாறிப் போக என்ன காரணம் என்று கேட்டார்.

இந்திரன் அவரைப் பணிந்து ஐயனே, ஒருநாள் நான் எனது ஐராவதம் யானையில் அமர்ந்து தேவலோகத்தில் பவனி வந்து கொண்டிருந்தேன். அப்போது அங்குவந்த துர்வாச முனிவர் ஒரு மலர் மாலையை என்னிடம் தந்து ஆசி கூறினார்.

நான் அலட்சியமாக அந்த மாலையை யானையின் மத்தகத்தில் போட்டுவிட்டேன். யானையோ அந்த மாலையை தன் துதிக்கையால் எடுத்து பூமியில் வீசி, தன் காலால் தேய்த்து நசுக்கிவிட்டது. இதைக்கண்ட துர்வாச முனிவர் அளவிலா கோபம் கொண்டு, இந்திரனாகிய என்னுடைய யவனம் கெடும்படி சாபம் கொடுத்து விட்டார். அவர் சாபம் காரணமாக நான் மட்டுமல்ல தேவர்கள் அனைவரும் தோற்றப் பொலிவை இழக்கும்படி ஆயிற்று. என்னுடைய போதாதவேளை ஆணவத்தில் அந்த மகா முனிவரை அலட்சியம் செய்தேன். இன்று நானும், தேவர்களும் முடிவெளுத்து, முகம் தோல் சுருங்கி, முதுமைக் கோலத்தில் வாடுகின்றோம். தாங்கள் தான் மனம் வைத்து, எங்களுக்கு பழைய நிலையை மீட்டுத் தரவேண்டும் என வேண்டி நின்றார். அதற்கு பிரம்மன் இந்திரா எனக்கு படைக்கும் தொழில் மட்டும் தான் உண்டு. உங்கள் துன்பம் தீர காக்கும் தெய்வமான மகா விஷ்ணு தான் இதற்கு பரிகாரம் செய்ய முடியும் என்றார்.

# விஷ்ணுவிடம் தேவர்கள் முறையிடல்

தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பிரம்மாவும் தேவர்களுடன் மகா விஷ்ணுவைக் காணச் சென்றார். திருமால் பள்ளி கொண்டிருக்கும் திருப்பாற்கடலுக்கு அனைவரும் சென்றனர். ஆதிஷேன் என்ற நாகத்தின் மீது சயனித்திருந்த பகவானைத் துதித்து முயைிட்ட தேவேந்திரன், மஹா பிரபு அரக்கர்கள் நாங்கள் பலவீனமாக இருப்பதைப் பயன்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடன் போரிட்டு தேவர்களாகிய எங்களை தோல்வியுறச் செய்தனர். என்னுடைய இந்திர பதவி போயிற்று. உலகில் யாகாதி கர்மங்கள் சரிவர நடக்காத காரணத்தால் தர்மம் குறைந்து, அதர்மம் பெருகிவிட்டது. நீங்கள் தான் எங்களை இந்த துன்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று உலகையே காக்கும் கடவுளான மஹா விஷ்ணுவிடம் வேண்டி நின்றனர்.

தேவர்களின் குறைகளைக் கேட்ட திருமால் உங்கள் இளமையை இழக்க உங்களுடைய அகந்தைதான் காரணம். திருப்பாற்கடலில் உள்ள அமிர்தத்தை எடுத்துப் பருகினால் என்றும் மாறாத இளமையை நீங்கள் அடைய முடியும் என்று கூறினார். அமிர்தத்தை அடைவதற்கான வழிமுறைகளையும் விஷ்ணு கூறி அருளினார். மந்திரமலையை மத்தாக்கி, வாசுகி என்ற நாகத்தைக் கயிறாக்கி பாற்கடலைக் கடந்தால் அமுதம் வெளிப்படும். இப்படி கடைவதற்கு தேவர்கள் மட்டும் போதாது. அசுரர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அசுரர்கள் பகைவர் கள் என்றாலும் அமிர்தம் கிடைத்து மாறாத இளமை பெறலாம் என்கிற பேராசையில் உங்களுடன் ஒத்துழைப்பார்கள் என்று கூறினார். தேவர்கள் அசுரர்களுடன் பேசியபின் அசுரர்கள் வாசுகி நாகத்தின் ஒரு பக்கத்தையும், தேவர்கள் மறுபக்கத்தையும் பிடித்துக்கொண்டு திருப்பாற்கடலை கடைய முடிவெடுத்தனர். அமிர்தத்தை விஷ்ணு பகவான் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பங்கிட்டு கொடுப்பது என்று முடிவாயிற்று.

## திருப்பாற்கடலை கடைதல்

ஒரு சுபமுகூர்த்த நன்னாளில் திருப்பாற்கடலை கடையும் வேலையில் ஈடுபட்டனர். சகல ஔசதங்களையும் திருப்பாற் கடலில் கலந்தார்கள். தேவர்களும் அசுரர்களும் மிகுந்த சிரமத்துடன் மந்திர மலையைக்கொண்டு வந்து மத்தாக நிறுத்தினார்கள். வாசுகி என்கிற நாகத்தினை கயிறாக்கி, நாகத்தின் தலைப்பகுதியை அசுரர்களும், வால்பகுதியை தேவர்களும் பற்றிக்கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். நீண்ட காலம் இது தொடர்ந்தது.

இப்படிக் கடையும்போது, மத்து (மந்திர மலை) சமநிலை இழந்து, புரளத் தொடங்கியது. உடனே பகவான் விஷ்ணு ஆமை வடிவம் தாங்கி மந்திரமலையின் அடியில் புதைந்து, மலையை தன் முதுகில் சுமந்தார். இதனால் மலை சீராகச் சுழன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலைத் தொடர்ந்து கடையும்போது, காமதேனு, பாரிஜாத விருட்சம், அப்சரஸ், சந்திரன் முதலியவை ஒவ்வொன்றாய் தோன்றின. அதுசமயம் கயிறாக இருந்த நாகம் நைந்து விஷத்தைக் கக்கியது. இதைக்கண்டு அனைவரும் அஞ்சி நடுங்கினர். இந்த சமயம் சிவபெருமான் அங்கு தோன்றி, அந்த ஆலகால விஷத்தை தாமே உண்டு அனைவரையும் காப்பாற்றினார். அங்கு பார்வதி தோன்றி சிவபெருமான் விழுங்கிய விஷம் அவருடைய தொண்டையிலேயே நிற்கும்படி, சிவபெருமான் தொண்டையைப் பிடித்து, திருநீலகண்டனாக சிவனை மாறச் செய்தார். இந்த பாற்கடலில் தோன்றிய மகாலெட்சுமியை மஹா விஷ்ணு தன் மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

## அமிர்தம் கிடைத்தல்

இப்படி பாற்கடலை கடையும்போது, கையில் அமிர்த கலசத்துடன் தன்வந்திரி என்ற தேவன் வெளிப்பட்டார். உடனே, அசுரர்கள் மூர்க்கத்தனமாக அமிர்த கலசத்தை அபகரித்தார்கள். உடன் தேவர்கள், விஷ்ணுவை வேண்டி, அமிர்தத்தை தங்களுக்குப் பெற்றுத்தர வேண்டினர். திருமால் தேவர்களுக்காக இரங்கி சகல லட்சணங்களுடன் கூடிய ஒரு மோகினிப் பெண்ணாக உருவெடுத்தார். அம்மோகினியின் பேரழகில் மயங்கிய அசுரர்கள் அமிர்த கலசத்தை அந்த மோகினியிடம் கொடுத்து பங்கிட்டுக் கொடுக்கச் சொன்னார்கள். மோகினி தேவர்களையும் அசுரர்களையும் இரண்டு வரிசைகளில் அமர வைத்து முதலில் தேவர்களுக்கு அமிர்தத்தை பரிமாறினாள். அசுரர்களுக்கு பரிமாற துவங்கும்போது அமிர்த கலசத்தில் இருந்த அமிர்தம் தீர்ந்து விட்டது. இதனால் தேவர்கள் அதிக வலிமையையும், இளமை யையும் பெற்றனர். தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அசுரர்கள் கோபமடைந்து தேவர்களுடன் போர் புரிந்தனர். போரின் முடிவில் அசுரர்கள் தோற்று பாதாளலோகத்துக்கு ஓட்ட மெடுத்தனர்.

## மகிஷியின் கோபம்

பாதாள லோகத்தில் மகிஷாசுரனின் தங்கை மகிஷி என்பவள் (எருமைத் தலையுடன் உள்ளவள்) சுந்தர மகிசன் என்ற எருமைத் தலை அரக்கனுடன் வாழ்ந்து கொண்டிருந்தாள். அந்த மகிஷி தனது இனத்தவர்களான அரக்கர்கள் தோற்று ஓடி வந்ததை அறிந்து வேதனை அடைந்தாள். இந்த நேரத்தில் அவளது சகோதரன் மகிஷாசூரனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்படவே மகிஷி வெகுண்டெழுந்து, தேவர்களை தேவலோகம் சென்று துன்புறுத்த லாளாள். இதனால் தேவர்கள் தங்கள் குருவான பிரஹஸ்பதியை அணுகி, ஆலோசனை கேட்டனர். அவர் சிவபெருமானிடம் சென்று முறையிடக் கூறினார்.

## ஐயப்பன் அவதரிக்கப் போவதாக சிவன் தெரிவித்தல்

தேவர்கள் கயிலை மலைக்குச் சென்று, சிவபெருமானிடம் மகிஷியால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை எடுத்துரைத்தனர். அவர்களிடம் சிவபெருமான் மகிஷியை கொல்வது பெண் கலப்பே இல்லாமல் பிறக்கும் ஒரு வீர மகனால் தான் இயலும். மகிஷியின் அந்திமக் காலம் நெருங்கிவிட்டது. மகிஷியை சம்ஹாரம் செய்ய எம்முடைய அம்சமும் விஷ்ணுவின் அம்சமும் கொண்ட ஒரு புதல்வன் பூவுலகில் தோன்றுவான். அவன் பந்தள நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் வளர்ந்து, பின் மகிஷியை சம்ஹாரம் செய்வான் என்று கூறினார். தேவர்களும் மகிழ்ச்சியுடன் தேவலோகம் திரும்பினார்.

## பஸ்மாசுரன் தவமும் அழிவும்

அமிர்தம் கிடைக்காமல் தேவர்களுடன் போரிட்டு அசுரர் கள் தோல்வியுற்று ஓடிய நிலையில் அசுரர்களின் தலைவன் ஒருவன் ஜெயவர்த்தம் என்ற நாட்டை ஆண்டு வந்த பஸ்மாசுரன் என்ற அரக்கன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள சிவபெருமானை நோக்கி தவமியற்றத் தொடங்கினான்.

யார் தவம் செய்தாலும் இறைவன் அவர்களுக்கு காட்சி அளித்தாக வேண்டும். அப்படித் தவம் செய்பவர்களின் தவத்தின் பலனாய் அவர்கள் கேட்கும் வரத்தையும் வழங்கியாக வேண்டும். தவம் செய்பவர்களை கடவுள் நிலையில் உள்ளவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நிராகரிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகினியாக வந்த விஷ்ணு

பஸ்மாசுரனின் தவத்தை மெச்சி, அவன் முன்பு சிவ பெருமான் தோன்றி, அவன் விரும்பும் வரம் யாது என்று கேட்டார். அதற்கு பத்மாசுரன் நான் யார் தலையில் கை வைத்தாலும் அவர்கள் அந்தக் கணத்திலேயே எரிந்து சாம்பலாகி விட வேண்டும் என்ற வரத்தைக் கேட்டான். சிவபெருமானும் அவன் கோரிய வரத்தைக் கொடுத்து விட்டார். உடனே பஸ்மாசுரன் தான் பெற்ற வரத்தின் மகிமையைச் சோதிக்க விரும்பினான். அந்த நடுக்காட்டில் சிவனைத் தவிர வேறு யாரும் இல்லாததால் உலக நாயகன் சிவபெருமான் தலை மீதே கை வைத்து சோதிக்க விரும்பினான். இதை அறிந்த சிவபெருமான் தான் தப்பிக்க அந்த இடத்திலிருந்து மாயமானார். இந்த வரம் பெற்ற பத்மாசுரனிடமிருந்து தேவர்களைக் காப்பாற்றும் பொறுப்பினை மகா விஷ்ணு ஏற்றுக் கொண்டு சிவனுக்கு உதவ முன் வந்தார்.

விஷ்ணு உலகிலேயே மிக அழகான வடிவம் கொண்ட மோகினி என்ற ரூபசுந்தரியான ஒரு பெண்ணாக தோன்றி பத்மாசுரன் இருக்கும் இடத்திற்கு வந்தார். பத்மாசுரன் மோகினியின் அழகில் மயங்கி காமப்பித்து கொண்டவனாக மோகினியை நெருங்கினான். அப்போது மோகினி அவனிடம், நீ எனக்கு நிகராக நான் பிடிக்கும் அபிநயங்களை நீயும் பிடித்து ஆடினாள் உன் விருப்பத்திற்கு இணங்குகிறேன் என்று கூற, காமப்பித்து தலைக்கேறிய பத்மாசுரனும் இந்த நிபந்தனைக்கு சம்மதம் தெரிவித்து மோகினியுடன் நடனம் ஆடினான். இருவரும் நடனம் ஆடிக்கொண்டிருக்கும்போது, ஆட்டத்தின் உச்சநிலையில் மோகினி தனது வலக்கையை தனது தலையின் மீது வைத்தாள். இதேமாதிரி பத்மாசுரனும் தனது வலது கையை தன்னுடைய தலையின்மீது வைக்க அந்த கணமே பத்மாசுரன் சாம்பலாகிப் போனான்.

# ஐயன் ஐயப்பனின் அவதாரம்

இந்த அழகிய மோகினியின் அதிரூப அழகில் சிவபெருமான் மயங்கினார். அப்போது சிவபெருமானுக்கு பெண் கலப்பில்லாத ஒரு குழந்தையை மகிஷியை அழிக்க உருவாக்கித் தருவதாக தேவர்களிடம் அளித்த வாக்குறுதி ஞாபகத்திற்கு வந்தது. முன்பொருகாலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுவின் சக்தி கொண்டு நான்முகன் தோன்றியது போல் ஐயப்பன் அவதரிக்கப் போகிறான், மோகினி வடிவிலிருந்த விஷ்ணுவும், சிவபெருமானும் நாவல தீவு என்னுமிடத்தில் சாலமரத்தின் குளிர்ந்த நிழலில் இணைந்தனர்.

உலகின் மாபெரும் இரண்டு சக்திகளான சிவபெருமானின் உக்கிரமும் விஷ்ணுவின் சாந்தமும் ஒருங்கே பொருந்திய குழந்தையாக அகிலாண்ட கோடி நாயகன் ஐயப்பன் இந்த பூவுலகில் தோன்றினார். தர்மத்தின் வடிவமாக சச்சிதானந்த மயமாக விவேகமும் வீரமும் அமைந்த குழந்தை ஐயப்பன் ஒளிமயமாகத் தோன்றினார்.

தங்களை ரட்சிக்கப் போகிற ஐயப்பன் என்ற அவதாரக் குழந்தையைக் காணச் சென்று பம்பை நதிக்கரையில் தேவர்கள் அனைவரும் திரண்டு அந்த மணிகண்டன் மீது பூமாரி பொழிந்தனர். சிவபெருமான் தேவர்களைப் பார்த்து, மகிஷியைக் கொன்று உங்களைக் காப்பாற்றப்போகிற ஐயப்பன் இங்கு அவதரித்தா யிற்று. எங்கள் குமாரன் தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பான். அவனால் கலியுகத்தில் தர்மம் நிலைநாட்டப்பெறும் என்று கூறி சிவனும், விஷ்ணுவும் மறைந்தனர்.

இங்ஙனம் அழகிய புண்ணிய நதியாம் பம்பை நதிக் கரையில் கோடி சூரிய பிரகாசத்துடன் ஐயன் ஐயப்பன் அவதரித்தான்.

## மகிஷியின் கதை

உலகில் மக்களிடம் தர்மநெறி குறைந்து பக்தியும் சத்தியமும் குறையும்போது பூவுலகில் நன்னெறிகளை நிலைக்கச் செய்ய மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்து தத்தன் என்ற ஒரு தேவமகனை உருவாக்கி இந்த பூமிக்கு அனுப்பி வைத்தனர். அவர்தான் தாத்தாத்திரேயன் என அழைக்கப்பட்டார்

தத்தன் பூவுலகில் சுபிட்சத்தை ஏற்படுத்திக் கொண் டிருந்தார். அப்போது தேவமுக காவலர் என்ற முனிவருக்கு லீலா என்ற பெண் பிறந்து வளர்ந்து வந்தாள். லீலாவிற்கும் தத்தனுக்கும் திருமணம் நடந்தது. லீலா உலகின் சிற்றின்பங் களையெல்லாம் ஒரேயடியாக அனுபவிக்க வேண்டும் என்ற இச்சை உடையவள். தத்தனுக்கோ நிலையில்லாத சிற்றின் பத்தை விட வேத தத்துவக் கொள்கைகளில் திளைத்து பேரின்பம் அடைவதிலேயே விருப்பம் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தன் சிறிது காலமே லீலாவுடன் குடும்ப வாழ்வு வாழ்ந்தான். பிறகு தவக்கோலம் பூண்டு வனம் புகுந்தான். லீலாவோ மோக மயக்கத்தில் இருந்தாள். தன்னோடு வந்து வாழ்க்கையின்பத்தை அனுபவிக்க தத்தனை வற்புறுத்தினாள். தத்தனை தன்னோடு வந்து வாழும்படியும் உடல்சுகம் தான் முக்கியம் எனவும் தத்தனை வற்புறுத்த ஆரம்பித்தாள். தத்தன் மிகவும் கோபம் கொண்டு ஒரு முனிவரின் மகளாய்ப் பிறந்தும் உன்னிடம் நல்ல குணம் சிறிதும் இல்லை. காமத்தில் பிதற்றும் நீ விலங்கைப் போன்றவள். ஆகையால் இனி மறுபிறவி எடுத்து மகிஷ முகம் கொண்டு (எருமை முகம் கொண்டு) அலைந்து திரிவாய் என்று சாபம் கொடுத்தான். லீலாவும் அவன் சாபத்திற்கு எதிர் சாபமாய் நீயும் மறுபிறவி எடுத்து எருமை முகம் கொண்டு பிறந்து என்னோடு பிணைந்து திரிவாயாக என்றாள்.

தத்தனின் சாபத்தால் லீலா கரம்பன் என்ற அசுரனின் மகளாக எருமை முகத்துடன் தோன்றினாள். அவள்தான் மகிஷி. கரம்பனின் சகோதரனுக்கு ரம்பனுக்கு பிறந்தவன் மகிஷாசுரன். மகிஷாசுரன் பல வரங்களைப் பெற்றவனாய் இருந்ததால் தேவர் களை அடக்கி ஆண்டு மும்மூர்த்திகளுக்கும் அச்சுறுத்தலாய் இருந்தான். இதனால் மும்மூர்த்திகளும் தங்கடைய அம்சங்களை ஒன்று திரட்டி சண்டிகாதேவி என்ற துர்க்கா தேவியை தோன்றச் செய்தனர். துர்க்கை சிம்மவாகனத்தில் எழுந்தருளி மகிஷாசுரனை சக்ராயுகத்தால் வதம் செய்தாள். தன் சகோதரன் வதம் செய்யப்பட்டதால், கோபம் அடைந்த மகிஷி நான்முகனை வேண்டி தவமியற்றி வேண்டிய வரங்களைப் பெற்றாள். தனக்கு மரணம் ஏற்பட்டால் சிவ, விஷ்ணு ஐக்கியத்தில் தோன்றி பூவுலகில் 12 வருடங்கள் சேவகம் செய்த ஒருவனால் தான் ஏற்பட வேண்டும் என்ற வரம் பெற்றாள். இந்த மகிஷி தேவர்களுக்கு மிகுந்த தொந்தரவு கொடுத்தாள். தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்க சிவ, விஷ்ணு ஐக்கியத்தில் தோன்றியவர் தான் நமது ஸ்ரீ ஐயப்பன்.

## மணிகண்டனை மன்னன் காணுதல்

கேரள நாட்டில் வானுயர்ந்த மாளிகைகள் மண்டபங்கள் நிறைந்த பந்தள நாட்டின் மன்னாகப் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த ராஜசேகரன் என்ற பக்திமான் ஆட்சி செலுத்தி வந்தான். அவனது ஆட்சியில் மக்கள் எந்தக் குறையுமின்றி சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். மன்னன் சிவபக்தன். அரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைஷ்ணவ பக்தை. இந்த தம்பதிகளுக்கு தங்கள் வம்சத்தை விளங்க வைக்க ஒரு வாரிசு இல்லையே என்ற ஏக்கம் இருந்தது. மன்னன் குழந்தைப் பேறு வேண்டி பல பூஜைகள் செய்து தான தர்மங்கள் செய்தான்.

இந்தச் சமயம் பந்தள நாட்டின் ஃ எல்லைப் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியிலிருந்து மிருகங்கள் நாட்டுப்பகுதி கிராமங்களில் புகுந்து அட்ரூழியம் செய்வதாக மன்னனுக்கு தகவல் வந்தது. உடனே பந்தள மன்னன் படைகள் புடைசூழ காட்டிற்கு வேட்டையாட கிளம்பினான். பகல் முழுவதும் வேட்டையாடிய மன்னன் மாலையில் சற்று இளைப்பாறி பம்பையாற்றில் நீராடி சிவத்தியானம் செய்ய ஆரம்பித்தான். அந்த சமயத்தில் எங்கோ ஒரு குழந்தை அழுகின்ற குரல் கேட்டது. மன்னனுக்கும் மற்றவர்களுக்கும் ஆச்சரியம். மனித சஞ்சாரமே இல்லாத இந்த காட்டிற்குள் குழந்தையின் அழுகுரலா! என ஆச்சரியத்துடன் அந்த அழுகுரல் கேட்ட திசையை நோக்கி மன்னன் அமைச்சருடன் சென்றான்.

தொலை தூரத்தில் மன்னன் ஓர் ஒளிப்பிழம்பைக் கண்டான். பம்பையாற்றின் கரையில் ஒரு மரத்தடியில் கோடி சூர்யப் பிரகாசத்துடன் ஓர் ஆண் குழந்தையைக் கண்டனர். அக்குழந்தையைக் கண்டதும் மன்னன், தெய்வீகத் தோற்றத்துடன் கழுத்தில் மணியுடன் உள்ள இந்த குழந்தை தெய்வத்தின் அவதாரமாகத் தான் இருக்க வேண்டும் என்றெண்ணி அக்குழந்தையை வாரி எடுத்துக் கொண்டான். இந்த தெய்வீகக் குழந்தை ஆள் அரவமற்ற இந்த நடுக்காட்டிற்குள் எப்படி வந்தது என சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை.

அந்த நேரத்தில் அரசனின் ஐயம் தீர்க்க முற்றும் துறந்த ஒரு சிவனடியாரான யோகி ஒருவர் அவ்விடம் வந்து மன்னா! இக்குழந்தையை ஈஸ்வரப் பிரசாதமாக கருதி வளர்த்து வா! இக்குழந்தை கழுத்தில் மணியுடன் பிறந்துள்ளதால் மணிகண்டன் என்று பெயர் சூட்டுவாயாக! காலம் உனக்கு யாவற்றையும் உணர்த்தும், பல அற்புதங்களை இக்குழந்தை பிற்காலத்தில் நிறைவேற்றுவான்.

உனக்கு இனி சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் எனக்கூறி மறைந்தார்.

## பந்தளத்தில் மணிகண்டன்

இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் மன்னன் அரண்மனைக்குத் திரும்பினான். குழந்தையுடன் மன்னன் வருவது அறிந்து நாடே குதூகலப்பட்டது. வரப்போகும் மைந்தனை வரவேற்க அரசி கோப்பெருந்தேவி அரண்மனை வாசலுக்கே வந்து மகிழ்ச்சியோடு குழந்தையை வாங்கி மார்புறத் தழுவி முத்தமிட்டு மகிழந்தாள். குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரி வழங்கினான்.

மணிகண்டன் வந்த சில வருஷங்களில்அரசி ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அவனுக்கு ராஜராஜன் என்று பெயர் சூட்டினர். மன்னர் குடும்பம் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வாழ நாட்கள் உருண்டோடின.

## மணிகண்டனின் குருகுல வாசம்

மணிகண்டன் ஐயப்பனுக்கு ஐந்து வயதாகும் போது கல்வி பயில முறைப்படி குருகுல வாசத்திற்கு மன்னன் மைந்தனை அனுப்பினான். மணிகண்டனுடன் அவனது தம்பி ராஜராஜனையும் மன்னரும், ராணியும் அரைமனதுடன் அனுப்பி வைத்தனர். பந்தள மன்னனின் குருகுல மஹாதேவி. அவர் தன் ஞான திருஷ்டியால் மணிகண்டனாக வந்துள்ள ஹரிஹரசுதனே என கண்டு கொண்டு அவருக்கு சகல கல்விகளையும் சிறப்புற போதித்தார். மணிகண்டனும் சகல சாஸ்திரங்களையும், கலை களையும் திறம்படக் கற்றான்.

சிவசக்தி ஒருங்கே பெற்றவனுக்கு குருகுலக் கல்வி அவசியமில்லைத்தான். ஆனால், அவதார இயல்புடன் பொருந்தியிருக்க வேண்மல்லவா? குருகுலப் பயிற்சியின் நிறைவு நாளில் குருவானவர் மணிகண்டனிடம் மணிகண்டா உன் அறிவும் ஆற்றலும் வார்த்தைகளுக்கடங்காதவை. சிவனின் வீரத்தையும், திருமாலின் சாந்தத்தையும் உன்னிடம் காண்கிறேன். எனக்கு குரு தட்சணையாக நீ ஒரு உதவி செய்ய வேண்டும். என் ஒரே மகனுக்கும் கண் பார்வையும், பேசும் சக்தியும் இல்லை. ஊமையும், குருடுமான அவனுக்கு வாழ்வில் ஒளிதர வேண்டும் எனக் கோரினார்.

ஐயப்பனாகிய மணிகண்டன் மனம் கனிந்து குருவின் மகனை அழைத்து நமோ நாராயணா என கூறச் சொன்னார். குரு வியக்கும் வகையில் குருவின் மகன், மணிகண்டன் கூறியதை திருப்பிச் சொன்னான். அவனுக்கு பேச சக்தி வந்து மகிழ்ச்சியுடன் பேச ஆரம்பித்தான். இதேபோல் மணிகண்டன் குருவின் மகனுக்கு கண்பார்வையை அளித்து அவனது வாழ்க்கையை ஒளி பெறச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். மணிகண்டன் குருவிடம் இங்கு நடந்ததை யாரிடமும் எதுவும் கூற வேண்டாம் என கேட்டுக் கொண்டார். மணிகண்டனும், அவன் தம்பி ராஜராஜனும் குருகுல வாசத்தை இனிதே முடித்து, அரண்மனை திரும்பினர். அவர்களை கண்டதும் மன்னனும் அரசியும் பேரானந்தம் கொண்டு அவர்களை ஆரத்தழுவி மகிழ்ந்தனர்.

## வாவர் என்ற கொள்ளையனை அடக்கி நண்பனாக்கியது

பந்தள நாட்டில் மணிகண்டன் வளர வளர அவனது திறமையும், குணமும் நாடு முழுவதும் பரவியது. தங்கள் வருங்கால மன்னன் மணிகண்டன் தங்களை சிறப்புற அரசாளுவான் என்று மக்கள் உணர்ந்து கொண்டு மணிகண்டனை போற்றி துதிக்கலாயினர். மணிகண்டனுக்கு 12 வயதாகிறது.

இந்த சமயத்தில் பந்தள நாட்டின் கடற்கரை கிராமங்களில் வாவர் என்ற அராபிய முஸ்லீம் கொள்ளைக்காரன், கொள்ளையடித்து மக்களுக்கு பெரிய அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். அவனிடம் நவீன ஆயுதங்கள் பல இருந்தால் அந்தப் பகுதியில் காவலில் இருந்த படைவீரர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. வாவரை அடக்க தானே படை நடத்திச் செல்வதாக மணிகண்டன் முன்வந்தான். மன்னரும் படைத்தளபதிகளும் திகைத்தனர். ஆயினும் மணிகண்டனின் பராக்ரமத்தை அறிந்தால் மன்னர் மணிகண்டனை போர் புரியச் செல்ல அனுமதித்தார்.

ஒரு சிறிய படையுடன் யானை மீதமர்ந்து வாவரை எதிர்த்து போரிட அவனிருக்கும் இடத்திற்கே மணிகண்டன் சென்றான். பெரிய படையை வைத்திருந்த வாவர், ஒரு சிறிய படையுடன் ஒரு சிறுவன் தன்னுடன் போரிட வருவதை அறிந்து எள்ளி நகையாடினான். வாவர் மணிகண்டனை நோக்கி, ஓ! சிறுவனே! உன்னோடு போர் செய்ய எனது மனம் விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிச் சென்றுவிடு என்று இகழ்ந்து பேசினான். ஆனால், மணிகண்டனோ அப்பாவி மக்களின் பொருட்களை கொள்ளை யடித்து, அமைதியாக வாழ்ந்த எம் மக்களை பீதியில் ஆழ்த்தி யுள்ள வாவரே! தைரியமிருந்தால் உன் வாளை எடு! என்னோடு நேருக்கு நேர் போரிட்டுப் பார் என்ற சவால் விடுத்தான்.

வாவருக்கும் மணிகண்டனுக்கும் பயங்கர வாட்போர் நடந்தது. கொஞ்ச நேரத்திலேயே தன் சக்தியெல்லாம் மணிகண்டன் கவர்ந்து கொண்டு தான் பலமிழந்துவிட்டதை வாவர் உணர்ந்தான். வாவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. மணிகண்டன் சாதாரண சிறுவன் அல்ல. தெய்வீக அவதாரம் என்பதை வாவர் உணர்ந்து கொண்டு மணிகண்டன் காலடியில் வீழ்ந்து தான் செய்த தவற்றிற்கு மணிகண்டனிடம் மன்னிப்பு கேட்டான். வாவர் ஐயப்பனை வணங்கி, ஐயனே நான் இத்தனை நாள் கொடுமையான தீய செயல்களில் ஈடுபட்டு என் வாழ்நாளை வீணாக்கி விட்டேன். தயவு செய்து எனக்கு நற்கதி அருள வேண்டும். நான்மதம் மாறி உங்களுக்கு சேவை செய்ய விரும்புகின்றேன் என்று கூறினான்.

இதற்கு மணிகண்டன் வாவரே மனமாற்றம் தான் நான் விரும்புவது. உங்கள் பலமனைத்தையும் ஆக்கபூர்வமான பணிகளுக்கு உபயோகப்படுத்துங்கள். மதம் மாறத் தேவை யில்லை. நீரும் இஸ்லாம் மதத்தவராகவே இருந்து எமக்கும் எம் பக்தர்களுக்கும் சேவை செய்து நற்கதி அடைவீராக! எருமைக்கொல்லி (எருமேலி) என்ற இந்த இடத்தில் நீர் அமர்ந்து என்னைத் தரிசிக்க காட்டு வழியில் என் பக்தர்கள் நடந்து வரும்போது அவர்களுக்கு தீங்கு எதுவும் நேராமல் காப்பாற்றி வாருங்கள். இன்று முதல் நீர் எனது ஆருயிர் நண்பர். எனது சரித்திரம் எழுதப்படும்போது உமது பெயரும் அதில் இடம்பெறும் என்று கூறி வாவரை ஆரத்தழுவி விடைபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரியின் சூது

வாவரை வென்று வந்ததால் மணிகண்டனின் திறமையும் வீரமும் நாட்டு மக்களால் பெரிதும் புகழப்பட்டது. மன்னன் ராஜசேகரன் முதுமையின் தளர்ச்சியினால் முன்பு போல் அரசாட்சியை திறம்பட நடத்த முடியவில்லை. மணிகண்டனின் பராக்ரமத்தை உணர்ந்த மன்னன் மணிகண்டனுக்கே முடி சூட்டுவது என்று தீர்மானித்தான்.

மணிகண்டன் முடிசூடப் போவது எல்லோருக்கும் மகிழ்ச்சி யளித்தது. ஆனால், ஒருவரைத் தவிர, அந்த ஒருவர் பொறாமையில் வெந்து புழுங்கிக் கொண்டிருந்த அந்நாட்டு அமைச்சரே. மணிகண்டனை கொன்றுவிடவும் அவர் எண்ணினார். இதனால் சில மாந்திரீகர்களைக் கொண்டு சில துர் தேவதை களை மணிகண்டனின் மீது ஏவிவிட்டான். மனிதப்பிறவி எடுத்தால் அவதாரமென்றாலும் மனிதருக்குரிய வினைகளை அனுபவித்தாக வேண்டுமல்லவா? மாந்திரீகர்களின் ஏவலாள் மணிகண்டனின் உடம்பில் கொப்புளங்கள், கட்டி வந்து அவஸ்தைப் பட்டார்.

மணிகண்டனின் துயர் துடைக்க மன்னன் சிவனை நினைத்து ஐந்தெழுத்து மூலமந்திரத்தை ஜெபிக்க ஆரம்பித்தான். தனது பக்தனின் வேண்டுதலுக்கு இணங்கி சிவபெருமான் தன்வந்திரி வேடத்திலிருந்த சிவபெருமான் தனது மகனாகிய ஐயப்பனை ஆரத்தழுவியதும் ஐயப்பனின் நோய்கள் யாவும் குணமாகியது. தன்வந்திரி ஐயப்பனிடம் இன்று முதல் உன்னை ஸ்பரிசிப்பவர் (தொடுபவர்) அனைவரும் சகல நோயிலிருந்தும் விடுபடுவர் எனக் கூறி மறைந்தார். இதனால் தான் இன்றும் ஐயப்பனைத் தழுவி அவன் மேனி மீது அபிஷேகம் செய்வித்த நெய் சர்வரோக நிவாரணியாக பக்தர்களால் பயன்படுத்தப் படுகின்றது.

## மந்திரியின் சதித்திட்டம்

மன்னன் தூய்மையின் வடிவமாய் இருந்தான் என்றால் மந்திரி தீமையின் வடிவமாய் இருந்தான். மணிகண்டனை எப்படியும் கொன்று தீர்ப்பதில் குறியாய் இருந்து இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைக் கரைத்தான். அரசியிடம் அமைச்சன், தாயே! இன்று பந்தள நாடு பல வளமும் பெற்று விளங்குகின்றது.

இதற்கு காரணம் நமது இளவரசன் ராஜராஜன் பிறந்தவேளை தான். அரச மரபில் பிறந்த ராஜராஜன் இருக்க வனத்தில் கண்டெடுத்த யாரோ ஒருவன் அரசாள்வதா? அவன் குலம் தெரியாது, வேடுவ குலத்தில் கூட பிறந்திருக்கலாம். அத்தகையவனுக்கு முடிசூட்டுவது முறையாகத் தெரியவில்லை என்று பலவாறு கூறி, அரசியின் மனதில் விஷ எண்ணங்களைத் தூவினான்.

அமைச்சர் வீசிய நச்சு விதை அரசியின் நல்ல மனதைக் கூட கெடுத்து விட்டது. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பதற்கொப்ப தொடர்ந்து அமைச்சர் போட்ட துர்போதனையால் அரசியின் நல்ல மனமும் மாறியது.

அமைச்சர் ஒரு புதிய சதித் திட்டத்தை அரசியிடம் விவரித்தான். அதன்படி அரசி கடுமையான தலைவலியால் அவதிப்படுவதுபோல் நடிக்க வேண்டும். அரண்மனை வைத்தியர் கள் அளிக்கும் வைத்தியத்திலும் பலனில்லை என்றாக வேண்டும். பிறகு அமைச்சர் அழைத்து வரும் மருத்துவர் தான் கொடுக்கும் மருந்தை புலிப்பாலில் கலந்து கொடுத்தால் நிச்சயம் தலைவலி குணமாகும் என்பார். மணிகண்டன் தாய்ப்பாசத்தால் தானே புலிப்பால் கொண்டு வருவதாக காட்டிற்குச் செல்வான்; காட்டில் கொடிய விலங்குகளால் கொல்லப்படுவான். இதுதான் அமைச் சரின் சூது திட்டம். அமைச்சரின் யோசனை அரசிக்கு சரியாய் தோன்றியது. அன்றே தலைவலியால் துடிப்பது போல் நடிக்க ஆரம்பித்தான்.

## மணிகண்டன் காட்டிற்குச் செல்லுதல்

அரசிக்கு கடுமையான தலைவலி எனக் கேள்விப் பட்டதும் மன்னர் துடிதுடித்துப் போனார். அரசியும் அரண்மனை வைத்தியர்கள் கொடுத்த மருந்தினால் வலி தீராதது போல் நடித்தாள். அது சமயம் அமைச்சர் தனக்குத் தெரிந்து நல்ல மூலிகை வைத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இருக்கிறார். அரசி நோய் நிச்சயம் அவரால் தீரும் எனக்கூறினான். அந்த போலி வைத்தியர் அழைக்கப்பட்டார். அந்த வைத்தியர் சாதாரண மருந்துகளால் தீரக்கூடிய வலியில்லை இது. நான் தரும் மூலிகை மருந்தை குட்டிபோட்ட புலியின் பாலில் கரைத்துக் கொடுத்தால் அரசியின் நோய் கண்டிப்பாகத் தீரும் என்று கூறினான்.

அரசியின் நோய் தீர புலிப்பால் கொண்டு வருவதைப்பற்றி மன்னன் பலருடன் ஆலோசித்தான். புலி அருகே சென்றாலே அது மனிதனைக் கொன்றுவிடும். அதுவும் குட்டி போட்ட புலி என்றால் கேட்கவே வேண்டாம். இது நடக்காத காரியம் என்றே அனைவரும் கூறினர். இந்த விஷயம் அறிந்து மணிகண்டன் மன்னனிடம் சென்று, நானே புலிப்பால் கொண்டு வருகிறேன். நான் காட்டில் கண்டெடுக்கப்பட்டவன். காட்டு மிருகங்களால் எனக்கு பயமில்லை என்று கூறினான். தாய் வலியால் துடிப்பதைக் கண்டு தானும் துடிதுடித்து தந்தையை மிகவும் வற்புறுத்தினான். மன்னன் தனியாக மணிகண்டனை அனுப்ப விருப்பமில்லாமல் படையோடு போகக் கூறினார். ஆனால், மணிகண்டனோ, கூட்டமாகச் சென்றால் புலியைப் பிடிக்க முடியாது. நான் புலி வேட்டைக்குப் போகவில்லை. புலியை பிடிக்கப் போகிறேன். ஆகவே தனியாக நான் செல்கிறேன் என்று கூறினான். அரசனுக்கு சிறிதும் சம்மதமில்லை என்றாலும் மணிகண்டன் மிக வற்புறுத்தி மன்னனை சம்மதிக்க வைத்தான்.

அரசன் முக்கண்ணன் சிவபெருமான் துணையிருக்கும் விதமாக மூன்று கண்களை உடைய தேங்காய் ஒன்றைக் கொடுத்து, நீளமான துணியில் தேங்காயுடன் அவல், பொரி, அரிசி, வெல்லம் முதலிய உணவுப் பொருட்களை இருமுடிகளாக கட்டச் செய்து மணிகண்டனை தலையில் வைத்து ஆசீர்வதித்து அனுப்பினால், மணிகண்டன் இருமுடிக் கட்டை தலையில் தாங்கி வில்லும் அம்பும் கையில் ஏந்தி காட்டை நோக்கிச் சென்றார்.

## மகிஷி சம்ஹாரம்

மணிகண்டன் காட்டிற்கு வந்து சேர்ந்ததும் ஆகாயத்தி லிருந்து இடி போன்ற பெருத்த ஒலியுடன் கூடிய ஒரு திவ்ய பிரகாசம் பூமி நோக்கி இறங்க ஆரம்பித்தது. பூமியிலிறங்கிய ஒலிக்கதிர்களிலிருந்து மகா விஷ்ணு, பரமேஸ்வரன், பிரம்மன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் மற்றும் ஏனைய தேவர்களும் பிரத்யட்சமானார்கள். அவர்கள் மணிகண்டப் பிரபுவிடம் அவனது அவதார மகிமை யையும் மகிஷியின் வரலாற்றையும் கூறி தற்சமயம் அலசா நதி தீரத்தில் (அழுதை கரை) அட்டகாசம் செய்து திரியும் மகிஷியை வதைக்க இதுவே தருணம் என்று கூறியதல்லாமல், மகிஷி பெற்றுள்ள வரங்களையும் அவளை அளிக்கும் முறை களையும் எடுத்துக் கூறினர். தேவர்கள் அனைவரும் தங்கள் அம்ச பலத்தையும், ஆயுத பலத்தையும் ஐயப்பனுக்கு அளித்து, ஐயப்பனை ஸர்வதேவதாஸ்வரூபனாக்கி சரணம் ஐயப்பா என விண்ணதிர முழங்கினர்.

மணிகண்டனாகிய ஐயப்பன் மகிஷியைத் தேடி அடர்ந்த காட்டினுள் சென்றான். இந்திரன் தேவர்கள் துணையோடு மணிகண்டன் தன்னுடன் போருக்கு வருவதை மகிஷி அறிந்து தனது தவவலிமையால் அநேக மகிஷிகளை உற்பத்தி செய்து, இடி முழக்கம் போல் சிரிப்பொலியோடு தன்னுடைய படைகளை போருக்குத் தயாராகும்படி ஆணையிட்டாள்.

இருபத்தியொரு சின்னங்களுடன் ஐராவதம் எனும் யானை மீதேறி வந்த தேவேந்திரன் தன்னுடைய வஜ்ராயுதத்தை உயர்த்தி போரைத் தொடங்கினான். அசுரப் படையினரும் தேவப் படை களும் மோதின. பன்னிரண்டு வயதே நிரம்பிய பாலகன் (மணிகண்டன்) தன்னுடன் போரிட வந்துள்ளதை கண்ட மகிஷி நகைத்தாள். பாலகனே! உன்னுடைய படை என்னை என்ன செய்ய முடியும்? என்னுடைய வலிமையையும் மாய சக்தியையும் நீ பார்க்கத்தான் போகிறாய்! என்று கத்தியவள் ஆயிரக் கணக்கான அம்புகளை விடுத்தாள். அநேக மாய வடிவங்களை தாங்கிப் போர் புரிந்தாள்.

ஐயப்பன் ஞானாஸ்திரம் என்ற பாணம் தொடுத்து மகிஷியின் மாய வடிவங்களை சிதைத்தார். அவளது படைக்கலங்களை முடமாக்கினார். அவளுடைய தேர்க்குடையை அறுத்து, அவள் தரித்திருந்த மகுடத்தையும் தூளாக்கினார். அசுரர்கள் தரப்பில் அனைவரும் அழிந்தனர். கடைசியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்டனுக்கும் மகிஷிக்கும் நேருக்கு நேர் நடந்த போர் படு உக்ரமாக இருந்தது. அண்ட சராசரங்களும் அஞ்சி நடுங்கின. மகிஷியின் ஒரு துளி ரத்தம் கூட பூமியில் சிந்தக்கூடாது. அப்படி சிந்தினால் அவளைப் போல சம பலமுள்ள பல மகிஷிகள் தோன்றுவர் என்ற பரமேஸ்வரனின் எச்சரிக்கையை நினைவில் கொண்டு வில்லம்புகளை கீழே போட்டு விட்டு மணிகண்டன் அவளுடன் த்வந்த யுத்தம் செய்ய ஆரம்பித்தான்.

ஐயப்பனுக்கும் மகிஷிக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. முடிவில் மணிகண்டன் மகிஷியின் இரு கொம்புகளையும் பிடித்து அவள் மண்டையைப் பிளந்து கிறுகிறுவென சுழற்றி ஆகாயத்தில் வீழ்த்தி அவளது உடம்பு பூமியில் வீழ்ந்து பிளவு படாமல் இருக்க தனது காலால் உடம்பைத் தாங்கி மற்றொரு காலால் அவள் கழுத்தை வைத்து அழுத்தி மூச்சுக் காற்றை ஓட விடாமல் தடுத்து மர்த்தனம் செய்து மகிஷியை வதம் செய்தான்.

மணிகண்டன் மர்த்தனம் செய்தது, கிருஷ்ணாவதாரத்தில் காளிங்கராயன் என்ற ஐந்து தலை நாகத்தின் மீது கண்ணன் நர்த்தனம் செய்தது போல் இருந்தது. மகிஷி கொல்லப்பட்ட ஆனந்தத்தில் தேவர்கள் மலர்களைப் பொழிந்தனர். பூது கணங்களும் முனிவர்களும் வீரமணிகண்டனை போற்றித் துதிக்க மும்மூர்த்திகள் எழந்தருளி மணிகண்டனை வாழ்த்தியருளினர்.

மகிஷி இறந்தவுடன் மகிஷியின் உடலை ஐயப்பன் தூக்கி எறிந்த போது அந்த பூத உடல் அழுதா நதிக்கரையில் கல்லிடம்தன்று என இன்று அழைக்கப்படும் இடத்தில் விழுந்தது. உடன் தேவர்கள் மகிஷியின் பூத உடல் வானளாவ வளரும் என்ற கூறினர். உடன் ஐயப்பன் பெரிய பாறாங்கல்லை அதன்மீது வைத்து பூத உடல் வளராமல் தடுத்தார். தேவர்களும் அழுதை ஆற்றினில் இருந்து கற்களை எடுத்து அந்த உடல் மீது போட்டனர். இதன் தொடர்ச்சியாகத்தான் இன்றும் அழுதையாற்றில் பக்தர்கள் குளிக்கும் ஒரு சிறிய கல்லை எடுத்து வந்து கல்லிடும் குன்று என்னும் இடத்தில் இடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சமாதா

மகிஷி இறந்த பிறகு மகிஷியின் பூர் ஜென்மத்தில் இருந்த அழகே உருவான ஒரு பெண் அந்த இடத்தில் வெளிப்பட்டு ஐயப்பனை வணங்கினாள். அந்தப் பெண் ஐயப்பனிடம் ஐயனே! என் பெயர் லீலாவதி. உங்கள் மூலம் எனக்கு சாப விமோசனம் கிடைத்தது. உங்கள் அருளால் அழகிய மனித முகம் பெற்றுவிட்டேன். நீங்களே என்னை உங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டினாள். அதற்கு ஐயப்பன் நான் இந்த ஜென்மம் முழுவதும் பிரமச்சாரியாக இருக்க சபதம் எடுத்துள்ளேன். நீ மஞ்சமாதா என்ற பெயரில் என் கோயிலுன்னு அருகில் கோயில் கொள்வாயாக. என்னை வணங்க வருகிற பக்தர்கள் உன்னையும் வணங்கிச் செல்வார்கள். என்னை முதன் முதல் தரிசிக்க வரும் பக்தன் (கன்னி ஐயப்பன்) எப்பொழுது எந்த வருஷம் சபரி மலைக்கு வராமல் இருக்கிறானோ அன்று உன்னை மணக்கிறேன் என்று கூறி ஐயப்பன் அங்கிருந்து திரும்பினார்.

## பொன்னம்பல மேட்டில் ஸ்ரீ ஐயப்பன்

மகிஷி வதத்தினால் இந்திரனுக்கு தேவலோகத்தில் தனது சிம்மாசனம் மீண்டும் கிடைத்தது. தேவர்கள் நிம்மதியாக வாழ முடிந்தது. ரிஷிகள், முனிவர்கள் அரக்கர்களின் தொந்தரவு இல்லாமல் யக்ஞ, யாகங்களை நிம்மதியாக மகிழ்ச்சியுடன் முறைப்படி செய்ய ஆரம்பித்தனர்.

மகிஷியை வதம் செய்தவுடன் தேவர்களும் முனிவர்களும் வேண்டிக் கொண்டபடி ஐயப்பன் பம்பை வழியாக பொன்னம்பல மேட்டில் (காந்தமலையில்) வந்து சேர்ந்தார்.

ஹரிஹரசுதனான ஐய்யப்பனும் தேவர்களின் பிரார்த் தனைக்கு மகிழ்ந்து அவர்கள் கேட்டபடி அவர்களுக்காக தனது விஸ்வரூப தரிசனத்தைக் காட்டி அவர்களை ஆட்கொண்டார். இந்திரன் ஸ்ரீ பூதநாத சுவாமிக்கு நன்றிக் கடனாக காந்தமலையில் பொன்னாலான ஒரு கோயிலை தேவசிற்பி விஸ்வகர்மாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் எழுப்பினான். அந்த கோயில் தேவர்கள், முனிவர்கள் கண்ணுக்கு மட்டும் தெரியும். அந்தக் கோயிலில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஒரு சிம்மாசனத்தை எழுப்பி ஐயப்பனை அதில் அமர இந்திரன் கேட்டுக் கொண்டான். ஐயப்பன் அதில் அமர்ந்து தேவர்கள் செய்த தூப தீப நைவேத்தியங்களையும் புஷ்பாஞ்சலி களையும் ஏற்றுக்கொண்டார்.

இந்த நேரத்தில் சிவபெருமான் ஐயப்பன் முன்தோன்றி மணிகண்டா! பந்தள மன்னன் ராஜ சேகரன் சிறந்த சிவபக்தன். அவனுக்கு நீயே ஞானோபதேசம் செய்து முத்தி அளிக்க வேண்டும். பந்தள மன்னனிடம் புலிப்பால் கொண்டு வருவதாகச் சொல்லி வந்தாய் அல்லவா? தேவர்கள் புலிகளாக உருவெடுத்து உன்னோடு வருவார்கள். இப்பூவுலகில் கலியுகம் முடியும் வரை நீ இருந்து சத்தியத்தையும் தர்மத்தையும் காப்பாற்றி வருவாயாக! என அருள் வாக்களித்து அங்கிருந்து மறைந்தார்.

## மணிகண்டன் நாடு திரும்புதல்

மணிகண்டன் ஒரு பெரிய புலிமேல் அமர்ந்து புலிக்கூட்டம் பின்தொடர பந்தள நாடு திரும்பினார். மணிகண்ட னைப் பார்க்க ஆவலோடு வந்த மக்கள், புலிக்கூட்டத்தைக் கண்டதும் பீதியடைந்து சிதறி ஓடினர். மணிகண்டன் அரண்மனை நோக்கி வருவதை அறிந்த மன்னன் மகிழ்ச்சியோடு ஓடிச்சென்று மணிகண்டனை வரவேற்றான். புலிக்கூட்டத்தையும் மணிகண்டனின் முகத்தில் கோடி சூர்யப் பிரகாசத்தையும் கண்ட மன்னன் மணிகண்டன் தெய்வப் பிறவி என உணர்ந்து ஐயப்பனை கைகூப்பித் தொழுதான்.

மணிகண்டன் மன்னனிடம் தந்தையே தங்கள் விருப்பப்படி, புலிகளைக் கொண்டு வந்துள்ளேன். தேவையான புலிப்பால் கறந்து கொண்டு மருத்துவம் பார்க்கச் சொல்லுங்கள் என்றான். அதற்கு மன்னன் மணிகண்டா நீ காட்டிற்குச் சென்றதுமே அரசியின் தலைவலி நீங்கி விட்டது. இனி புலிகள் தேவையில்லை, புலிகளை காட்டிற்கு அனுப்பி விடலாம் என்று கூறினார். அப்போது அரசியும், அமைச்சனும் ஓடிவந்து மணிகண்டனின் பாதத்தில் வீழ்ந்தனர். உடன் அரசி மணிகண்டா உன் மகத்துவம் அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மன்னித்து அருள வேண்டும் என கண்ணீர் மல்க வேண்டினாள். அமைச்சரும் மன்னித்து அருள வேண்டி நின்றார். மணிகண்டன் அரசியையும், அமைச்சரையும் மன்னித்து புலிக்கூட்டத்தையும் மறையச் செய்தார்.

## ஐயப்பனின் தெய்வாம்சம் அறிதல்

இந்த வேளையில் அரண்மனைக்க அகத்திய மாமுனிவர் வந்தார். அகத்தியர் மன்னனுக்கும், அங்கிருந்த அரசி, அமைச்சர், மற்ற அரச பிரதானிகளுக்கும், மணிகண்டனின் பூர்வீகத்தையும் தர்மசாஸ்தாவின் வரலாற்றையும், இங்கு மணிகண்டன் மகிஷி சம்ஹாரத்திற்காக பூவுலகில் அவதரித்த காரணத்தையும் விளக்கினார். இதைக் கேட்ட மன்னன் ஒரு தெய்வம் சாதாரண மனிதனைப் போல் தன்னுடைய அரண்மனையில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்ததை எண்ணி ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தான். அரசியும், அமைச்சர்களும், மற்றவர்களும் கண்ணில் நீர்பெருகி, மணிகண்டனைத் தொழுது நின்றனர். மன்னன் மணிகண்டனாகிய ஐயப்பனிடம் தான் தெரிந்தோ, தெரியாமலோ ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித் தருளும்படி வேண்டினான்.

மணிகண்டன் மன்னனைத் தழுவி தந்தையே, நான் ஒரு தெய்வீக காரியமாக தங்களோடு 12 ஆண்டுகள் தங்கியிருந்தேன். இப்போது அந்த காரியம் நிறைவேறிவிட்டது என்று கூறினான். மணிகண்டன் தெய்வத்தின் அவதாரம் என்பதை அறிந்த மக்களுக்கு இது வரை மணிகண்டன் மீது வைத்திருந்த மதிப்பு அதிகமாகி பக்தியாக மாறி ஐயப்பனை துதித்தனர்.

## ராஜராஜனுக்கு முடிசூட்டுதல்

மணிகண்டனின் தம்பி ராஜராஜனுக்கு முடிசூட்டு விழா ஏற்பாடாயிற்று. நாடே விழாக்கோலம் பூண்டது. அகத்திய முனிவர் தூய நீரைத் தெளித்து முடிசூட்டு விழாவைத் தொடங்கி வைத்தார். மன்னன் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஐயப்பன் தன் திருக்கரங்களால் இராஜராஜனுக்கு பந்தள நாட்டின் மன்னாக முடிசூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தள மன்னனுக்கு ஐயப்பன் ஞானோபதேசம் செய்தல்

அகத்திய முனிவர் விடைபெற்றுச் சென்றதும் பந்தள மன்னன் கேட்டுக் கொண்டபடி மன்னனுக்கு ஐயப்பன் ஞானோபதேசம் செய்ய திருவுளம் கொண்டார். ஐயப்பன் குரு ஸ்தானத்திலும் மன்னன் சீடன் ஸ்தானத்திலும் அமர்ந்தனர். தன் முன் கை கூப்பியபடியிருந்த மன்னனுக்கு ஐயப்பன் கூறிய ஞானோபதேசமாவது :

இறைவனை அடையும் மார்க்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகும். அவற்றை ஐம்புலன்களை அடக்கி வேத விதிகள் வழுவாது கடைப்பிடிக்க வேண்டும்.

ஆலயத் திருப்பணி வழிபாடு, புண்ணிய நீராடல் பெரியோரைப் பேணுதல், நீத்தார் கடன் செய்தல், விருந்தோம்பல், அறம் பிறழாத இல்லறம் இவை சரியை மார்க்கமாக கடைப்பிடிக்க வேண்டியவைகள்.

1. பூஜை மந்திரம், யந்திரம், ஜபம் முதலியவை கிரியைக்கான உபாயங்கள்.
2. அஸ்டாங்க யோகத்தால் இறைவனின் உருவத்தைப் பெறுவது (சாரூப பதவி) யோக மார்க்க உபாயம்.
3. மாயை அகற்றி ஆணவம் ஒழித்து பிரம்மத்தில் மனதை ஈடுபடுத்துவது ஞானமார்க்கமாகும்.

நால்வகை ஆச்சிரமங்களில், பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் இவற்றள் சிறந்தது. பகவானை எளிதாய் அடைய உதவுவது, கிருஹஸ்தம் என்கிற இல்லறம் ஒன்றே.

இவ்வாறு பல விஷயங்களை மன்னனுக்கு ஐயப்பன் ஞானோபதேசம் செய்தார். பிறகு மன்னனிடம் தாங்கள் விரும்பும் வரத்தைக் கேட்கலாம் என ஐயன் கூறினார். அதற்கு மன்னன் தனக்கு மோட்சத்தை அளிக்க வேண்டும் என்றும், மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்குளிர அவர்கள் மனதில் குடிகொண்ட ஐயப்பனுக்கு பந்தள நாட்டில் ஒரு கோயிலை நிர்மாணிக்க தாம் விரும்புவதாகவும் கூறினார்.

மன்னனிடம் விருப்பத்தை பூர்த்தி செய்ய ஒப்புக் கொண்ட ஐயப்பன் அரசனை நோக்கி மன்னா! உங்கள் விருப்பம் நிறைவேறும். புனிதம் வாய்ந்த பம்பா நதிக்கரைக்கு கிழக்கே சபரி எனும் பக்தை வாழ்கிறாள். அந்த பக்தையின் பெயரில் சபரிமலை விளங்கும். அங்கே எனக்கு ஆலயம் அமைப்பீர்களாக, அந்த இடத்தை தாங்கள் அறிந்து கொள்ள இங்கிருந்தபடியே ஒரு அம்பு எய்கிறேன். அந்த அம்பு சபரி இருக்குமிடத்திற்கு அருகிலுள்ள அரச மரத்தில் தைக்கும், அந்த இடத்தில் எமக்கு திருக்கோயில் அமையுங்கள் என்று கூறி அம்பு எய்தினார். பின் மணிகண்டனாகிய ஐயப்பனின் திருவுருவம் பேரொளிப் பிழம்பாய் மாறி மறைவதை அனைவரும் கண்டு மெய்சிலிர்த்தனர்.

## சபரிக்கு மோட்சம் அளித்தது

இராமாயண காலத்தில் (திரேதாயுகம்) ராமபிரானை தரிசிக்க வேண்டுமென்று வெகுகாலம் காத்திருப்பது பாப விமோசனம் பெற்றவள் சபரி. தனக்கு சாயுக்ஜ பதவி கிடைக்க வேண்டும் என ஐயப்பனை நினைந்து நீலிமலைக் காட்டில் தவமியற்றி வந்தாள்.

சபரியின் தவத்தில் மனம் கனிந்த ஐயப்பன் பாலகன் வடிவத்தில் காட்சி அளித்தார். ஐயப்பன் தோன்றியதால் ஆனந்தப் பிரவாகமெடுத்த சபரி ஐயனே! என் தவத்திற்கு மனமிறங்கி என் முன் தோன்றி அருள்பாலித்தீர். உங்களால் நான் பிறவிப்பயன் அடைந்தேன்! என்று யோற்றித் துதித்து அருஞ்சுவைக் கனிகளை ஐயப்பனுக்கு கொடுத்து மகிழ்ந்தாள்.

ஹரிஹர புத்திரன் சபரியை நோக்கி, அம்மையே உன் தவம் நிறைவுற்றது. உனக்கு சாயுஞ்ய பதவி அளித்து அருள்கிறோம். உன் பக்தியும் தியானமும் உலகம் உள்ளளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை பெற்றிருக்கும். நீ தவமிருந்த இந்த நீலிமலைப் பகுதி இனி சபரிமலை என்றே அறியப்படும். யாம் இங்கே கோயில் கொள்வோம். என்னைத் தரிசிக்க வரும் பக்தர்கள் உன்னையும் வணங்குவர். உன்னுடைய திருநாமம் யாவராலும் உச்சரிக்கப்படும் எனக் கூறி மறைந்தார்.

## சபரிமலையில் கோயில் நிர்மாணித்தல்

பந்தள மன்னன் அகத்தியர் ஆலோசனைப்படி மணிகண்டனுக்கு குருகுல வாசத்தில் குருவாய் இருந்த மகானை ஐயப்பனுக்கு சபரிமலையில் ஆலயம் அமைக்க துணைக்கு அழைத்துக் கொண்டு புறப்படத் தயாரானான். சபரிமலையில் ஆலயம் அமைக்க புறப்பட்ட அரசன் முதல் கட்டிடத் தொழிலாளி வரை அனைவரும் நீல உடை அணிந்து, கழுத்தில் மணிமாலை அணிந்து 41 நாட்கள் விரதமிருந்து இருமுடி கட்டிக் கொண்டு சபரிமலைக்குப் புறப்பட்டனர். இப்படிப் புறப்பட்ட பரிவாரங்கள் எருமேலி வந்தடைந்தது. ஆலங்காட்டுப் பரிவாரங்களும் அம்பலப்புழா பரிவாரங்களும் அரசரைப் பின் தொடர்ந்து பேரூர் ஓதோடு வந்தடைந்து ஓய்வு எடுத்தனர். பின் அழுதைக்கு வந்து நீராடி சிறுகல்லை எடுத்து மகிஷியை அடக்கம் செய்த கல்லிடும் குன்றில் கற்களைப் போட்டனர். இஞ்சிப்பாறை தலைப்பாறை மலை கடந்து, கரிமலை கடந்து, பம்பை வந்தபின் அரசன் ஓர் அறுசுவை விருந்து வைத்தான்.

பம்பையை அடைந்த பந்தள மன்னன் இனி சாஸ்தாவின் பூங்காவனம் சென்று அம்பு தைத்த இடத்தை கண்டுபிடிக்க வேண்டும். என்ற எண்ணி ஐயப்பனை வேண்டி, ஐயனே இனி செல்ல உள்ள பயணத்திற்கு நீங்கள் தான் வழிகாட்டி அருள்புரிய வேண்டும் என வேண்டி நின்றான். உடனே வானத்தில் சூர்யப் பிரகாசமாய் ஓர் ஒளி தோன்றியது. அதில் ஒரு கருடப் பறவை பறந்து வழிகாட்டிக் கொண்டே பறந்தது. உடனே அரசனும் பரிவாரங்களும் அப்பறவையை பின் தொடர்ந்து நீலிமலை ஏற ஆரம்பித்தனர். அப்பாச்சி மேடு கடந்து சபரி பீடம் வந்த போது கருடப் பறவை ஓர் ஆலமரத்தில் வந்து அமர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே மன்னர் மணிகண்டன் சொன்னதை ஞாபகப்படுத்தி வீரர்களே நாம் ஐயப்பனுக்கு ஆலயம் நிர்மாணிக்க இருக்கிற இடத்தை நெருங்கி விட்டோம். உங்கள் அம்புகளையும், கணைகளையும் இந்த ஆலமரத்தில் போட்டு விடுங்கள் எனக் கூறினான். அப்படி சரங்களை போட்ட இடம் தான் சரம் குத்தி என இன்று அழைக்கப்படுகிறது. அந்த இடத்தில் யாவரும் அன்றிரவு இளைப்பாறினர்.

மன்னர் உறங்கும் போது, திடீரென சிவகணத்தலைவன் அவ்விடம் தோன்றி, மன்னனை மட்டும் எழுப்பி தன் பின்னால் வரும்படி அழைத்துக் கொண்டு பொன்னம்பல மேட்டிற்குச் சென்றான். அங்கே மன்னன் ஜெகஜ்ஜோதியாய் விளங்கும் பொன் வண்ணக் கோயிலில் நவரத்தின சிம்மாசனத்தில் ஸ்ரீ ஐயப்பன் எழுந்தருளி இருந்ததைக் கண்டு மெய்சிலிர்த்து வணங்கினான். அங்கே சத்தியம் காவல் புரிந்தது. அன்பு, தூய்மை, கருணை, ஆனந்தம் இவை 18 படிகளாய் அமைந்திருந்தன. அப்போது பூதநாதன் அரசனை நோக்கி நீங்கள் அமைக்கும் திருக்கோயிலில் எம்முடைய திருக்கோயிலில் எம்முடைய திருக்கோலம் எப்படி அமைய வேண்டும் என்பதை உமக்குத் தெரிவிப்போம். அங்கு என் கோயிலுக்கு அருகில் மஞ்சமாதாவிற்கும் கோயில் அமைப்பா யாக! எனக் கூறி அனுப்பி வைத்தார்.

பந்தள மன்னன் கோயில் கட்டும் திருப்பணி ஆரம்பிக்கும் சமயம் வானத்திலிருந்து சில முனிவர்களும் தேவலோக சிற்பியான விஸ்வகர்மாவும், தேவதச்சர்களும் வந்து சேர்ந்தனர். விநாயகருக்கு பூஜை நடத்திய பின் மன்னன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினான். வானம் பொழிந்தது. வானவர்கள் பூழை பொழிந்தனர்.

ஐயனின் கோயில் கட்டும் திருப்பணி எதிர்பார்த்ததற்கு முன்பாகவே இனிது முடிந்தது. ஐயனின் விக்ரகத்தை பிரதி'டை செய்ய வேண்டியது தான் பாக்கி. அன்று மன்னனின் கனவில் ஐயன் ஐயப்பன் தோன்றி விக்ரகம் இருக்க வேண்டிய நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் காட்டினார். யோகபட்டம் அணிந்த முட்டிகளுடன் அமர்ந்த நிலையில் சின் முத்திரை காட்டிய வலக்கையுடன் அபய ஹஸ்தம் அளிக்கும் இடது கையுடன் ஒன்றாய்ப் பொருந்தி விளங்கும் தாமரைப் பொற்பாதங்களும், யோகாசனத்துடன் கூடிய தவநிலையும் கூடிய அம்சத்தில் ஐயப்பன் காட்சி அளித்து தன் உருவம் பிரதி'டையில் எப்படி அமைக்க வேண்டும் என்பதை மன்னருக்கு காட்டி அருளினார்.

## சபரி மலையில் ஐயப்பன் பிரதிஷ்டை

பொழுது விடிந்ததும், சபரிமலையில் விண்ணுலகமும், மண்ணுலகமும் முனிவர்களின் வேத ஒலிகளால் நிறைந்தது. பந்தள மன்னரும் மற்றவர்களும் பம்பையில் நீராடி புத்தாடை அணிந்து ஐயன் ஐயப்பனை நினைந்து அமர்ந்திருந்தனர். அப்போது தவத்தால் வலிமை பெற்ற பரசுராமரை அழைத்துக் கொண்டு அகத்திய முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். மன்னன் அவர்களை மரியாதையுடன் வரவேற்றான். ஐயப்பனின் விக்ரகத்தை மன்னனின் கனவில் தோன்றிய அந்தத் திருக் கோலத்திலேயே வடிவமைத்திருந்தனர்.

பரசுராமர் பந்தள மன்னனிடம் கேரளத்தில் பல கோயில் கள் உண்டு. ஆனால் இந்த சபரிமலை கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரகம் மட்டும் யோக பட்டமும் சின்முத்திரை யுமாய் அமைந்துள்ளதால் இது விசேஷமானது என சிலாகித்து போற்றிக் கூறினார்.

ஐயப்ப விக்ரகம் பிரதிஷ்டை செய்த நாள், ஒரு மகர சங்கராந்தியன்று பஞ்சமி திதி, உத்திரம் நட்சத்திரம் கூடிய சுப முகூர்த்தத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டது. மங்கள வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் ஒலிக்க, தேவர்கள் துந்திலி ஒலிக்க, கந்தர்வர்கள் பண் இசைக்க மும்மூர்த்திகள் வானின்று வாழ்த்த ஐயப்பன் ஜோதி வடிவாய் அங்கு தோன்றினார். ஐயப்பன் 12 வயது பாலகனே ஆகையால் கோயில் மேலே செல்ல வசதியாக தேவ மங்கையர்கள் 18 பேர் 18 படிகளாக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் ஒருவராக கோயில் முன் படுத்துக் கொண்டு ஹரிஹரசுதன் கோயிலை அடைய வசதி செய்து கொடுத்தனர். அகிலாண்ட கோடி நாயகன் ஐயன் ஐயப்பன் இந்த தேவ மங்கைகள் மூலம் கோயில் மேல் வந்து பரசுராமர், அகத்தியர், குருதேவர், பந்தள மன்னன், தேவர்கள், மும்மூர்த்திகள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த கோயில் விக்ரகத்தில் ஐக்யமானார்.

தொடர்ந்து மாளிகைப் புறத்தம்மன், வாவர், கடுத்தசாமி, கருப்பசாமி, விநாயகர், யக்ஷி, நாகர், நவக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. சிவகணத்தவர்களும், தேவேந்திரன் உட்பட தேவருலக அனைத்து தேவலோக வாசிகளும், நாரதர் உட்பட மும்மூர்த்திகளும் பூதநாதன் ஐயப்பனின் திருக்கோலம் காண சபரிமலைக்கு வந்தால் மண்ணுலகில் ஒரு விண்ணுலகமாக சபரிமலையை ஐயப்பன் படைத்துக் கொண்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சபரிமலை கோயில் திறக்கும், மூடும் நாட்கள் | | |
|---|---|---|
| பூஜை | திறக்கும் நாள் நேரம் 5.30 a.m. | மூடும் நாள் நேரம் 10.00 p.m. |
| மண்டல பூஜை உற்சவம் | 15.11.2012 | 26.12.2012 |
| மகர விளக்கு உற்சவம் | 30.12.2012 | 20.01.2013 |
| மகர விளக்கு ஜோதி | 14.01.2013 | |
| மாத பூஜை (மாசி) | 12.02.2013 | 17.02.2013 |
| மாத பூஜை (பங்குனி) | 14.03.2013 | 19.03.2013 |
| உற்சவம் | 17.03.2013 | 27.03.2013 |
| கொடியேற்றம் | 18.03.2013 | |
| பங்குனி உத்திரம் + ஆராட்டு | 27.03.2013 | |
| விஷு உற்சவம் | 09.04.2013 | 17.04.2013 |
| விஷு (சித்திரை) | 14.04.2013 | |
| மாத பூஜை (வைகாசி) | 14.05.2013 | 19.05.2013 |
| பிரதிஷ்டை நாள் | 20.05.2013 | 21.05.2013 |
| மாத பூஜை (ஆனி) | 14.06.2013 | 19.06.2013 |
| மாத பூஜை (ஆடி) | 16.07.2013 | 21.07.2013 |
| மாத பூஜை (ஆவணி) | 16.08.2013 | 21.08.2013 |
| ஓணம் | 14.09.2013 | 18.09.2013 |
| மாத பூஜை (புரட்டாசி) | 16.09.2013 | 21.09.2013 |
| மாத பூஜை (ஐப்பசி) | 16.10.2013 | 21.10.2013 |
| ஸ்ரீ சித்திரை ஆட்ட திருநாள் | 01.11.2013 | 02.11.2013 |
| மண்டல பூஜை உற்சவம் | 15.11.2013 | 26.12.2013 |
| மண்டல பூஜை | 26.12.2013 | |
| கோயில் திறப்பு | 30.12.2013 | |
| அடுத்த ஜோதி | 14.01.2014 | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதாஸ் களஞ்சியம்

அனைத்து வகையான பலசரக்கு

பொருட்களுக்கும்.



ஆடியபாதம் வீதி,

திருநெல்வேலி.

# க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

## மருந்துக்கடை



இல:76 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஓம் கன்னிமூல கணபதிபகவானே
சரணம் ஐயப்பா

## ஆசிரியரின் வெளியீடுகள்

1. கபிலானந்தம்
2. கணேசகலசம்
3. அத்திமுகன் அருள் அமிர்தம்
4. சைவ வாழ்வியலும் இடர்களை பதிகமும்
5. புகர்முகப் புங்கவன்புகழ்நாதம்
6. சிவசக்தி ஞானனந்தம்
7. நித்தியகரும விதியும் நமச்சிவாய மாலையும்
8. மங்கல நாதம்
9. ஹரிகர சங்கமம் ஐயப்பன்
10. திருநீல கண்ட சந்திரசேகர தரிதனம்
11. முத்துமாரி அம்மன் தரிசனம்
12. ஹரிகரானந்தம்
13. சபரிநாதம்
14. கேதாரகௌரி தோத்திரத்திரட்டு
15. முருக வழிபாடு
16. பரமநாதன்
17. சபரிதரிசனம்
18. சாமி ஐயப்பன்
19. மணிகண்டநாதம்

பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org